விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 16 வியாழக்கிழமை (30.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 42

## தமிழரின் உரிமையை வென்றெடுக்க
# சிங்கள மக்களோடு கைகோருங்கள்
### யாழில் அத்துரலிய ரத்தின தேரர் அழைப்பு



(யாழ்ப்பாணம்)
தமிழ்மக்களின் உரிமையை வென்றெடுக்க சிங்கள மக்களோடு தமிழ் மக்கள் கைகோர்க்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் யாழ் மண்ணில் வைத்து அழைப்பு விடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மது போதையில் அரச பஸ் சாரதி
### சோதனையில் சிக்கினார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலிருந்து அககரைப்பற்றுக்கு பயணித்த அரச பேருந்தின் சாரதி மது போதையில் இருந்தமையால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், அதில் பயணித்த 46 பயணிகளையும் மற்றொரு பேருந்தில் அக்கரைப்பற்றுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.15 மணியளவில் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் இராணுவம் இணைந்து பேருந்தை சோதனை 23

## தமிழ் மக்களின் தனித்துவத்தினை
# பெரும்பான்மை மேலாதிக்க அரசு ஏற்க தயாராக இல்லை
### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
சிங்கள மக்களின் வாக்குகளை இலக்காக கொண்டே சுதந்திர தினத்தன்று சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக வட மாகாண முன்னாள் 23

## 53 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க நடவடிக்கை
### மார்ச் முதலாம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)
பட்டதாரிகள் மற்றும் அதற்கு சமமான உயர் தேசிய டிப்ளோமா பட்டங்களை பெற்றுள்ளவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளவாறு தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க தேவையான அனைத்து தகவல்களும் திரட்டப்பட்டுள்ளன. தேவையான நிதி ஏற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என கோட்டா அரசு அறிவித்துள்ளது.
அரசாங்க, பகுதியளவு அரசமற்றும் திணைக்களங்களில் 23

## 150 கிலோ கஞ்சாவுடன் யாழ் நகர் பகுதியில்
### நேற்று இரவு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
150 கிலோ கஞ்சாவுடன் யாழ் நகர் பகுதியில் நேற்று இரவு ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்
நேற்று இரவு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் தேடுதல் மேற்கொண்ட போது வைத்தியசாலைக்கு முன்பாக 150 கிலோ கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-3.9)

## கொரோனா வைரஸ் தொடர்பில்
# தவறான செய்திகள் மக்களுக்கு பரப்பப்படுகின்றது
### எச்சரிக்கையாக இருக்குமாறு அரசு அறிவுறுத்தல்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் உண்மைக்குபுறம்பான பிரசாரங்களைக்கண்டு ஏமாற வேண்டாம் என அரச தகவல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக அந்த திணைக்களம் நேற்று புதன் கிழமை வெளியிட்டுள்ள 23

## கனேடிய உயர்ஸ்தானிகர் முதல்வருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்டை கனேடிய உயர்ஸ்தானிகர் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.
இதன்போது யாழ் நகரத்தில் பாரிய அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு றொரண்டோ 23

## கூட்டணி தொடர்பில் ரணில் – சஜித் நேற்று சந்திப்பு

(கொழும்பு)
ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு 23

## கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையில் உறுப்பினர்கள் இடையே கைகலப்பு
### ஒருவர் வைத்தியசாலையில்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை விசேட அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.
இதன் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் மீது சுயேட்சைக்குழு உறுப்பினர் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், 23

## முகக் கவசத்துக்கு நிர்ணய விலை
### சுகாதார அமைச்சு

(கொழும்பு)
கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை அடுத்து முகக் கவசத்துக்கான (மாஸ்க்) கட்டுப்பாட்டு விலையை சுகாதார அமைச்சு நிர்ணயித்துள்ளது. 23

## கோட்டாவுக்கு எதிராக வவுனியாவில் இன்று போராட்டம்
### அனைவரையும் அணிதிரள அழைப்பு

(வவுனியா)
காணாமல் ஆக்கப்பட்ட எவரும் உயிரோடு இல்லை. அனைவரும் மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ தெரிவித்துள்ள பொறுப்பற்ற கருத்தைக் கண்டித்து இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் வவுனியா 23

## பேருந்து – மோ.சைக்கிள் ஓமந்தையில் விபத்து
### உயர்தர மாணவன் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா ஓமந்தை விளக்குவைத்த குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார், குறித்த விபத்து தொடர்பாக தெரியவருவதாவது. 23

# யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2020

காலம் :- 30.01.2020 வியாழக்கிழமை
நேரம் :- பிற்பகல் 1.30 மணி
இடம் :- பாடசாலை மைதானம்

**தலைவர்**
திரு.சி.தர்மரத்தினம் அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்கள்
(உப அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

தேசபந்து - தேசகீர்த்தி
லயன் அ.கிருபாகரன் அவர்கள்
(அதிபர், கிருபா லேணர்ஸ்)

**கௌரவ விருந்தினர்**
திரு.வி.சஞ்சீவன் அவர்கள்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

பாடசாலைச் சமூகம்
யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

---

सत्यमेव जयते

YEARS OF CELEBRATING THE MAHATMA

# மாவிட்டபுரம்
# ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில்

## தைப்பூச இலட்சார்ச்சனை சிறப்பு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின்
நிதிப்பங்களிப்புடன் மாவை ஆதீனம் ஏற்பாடு செய்துள்ள
தமிழ்நாடு (இந்தியா) பண்ணிசை கலைஞர்கள் வழங்கும்

## திருமுறை பண்ணிசை கச்சேரி

**30.01.2020 வியாழக்கிழமை முதல்**
**08.02.2020 சனிக்கிழமை வரை**

தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.30 மணி முதல்

### இந்திய கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| ஓதுவார் மூர்த்தி | : | தருமை தேவார இசைமணி புகழேந்தி மகேஸ்வரன் |
| ஓதுவார் மூர்த்தி | : | ஆலவாய் அண்ணல் தேவார பாடசாலை சண்முகம் விஷ்ணு |
| வயலின் வித்துவான் | : | சிதம்பரம் கோகுலாசாரி ஸ்ரீராம் |
| மிருதங்க வித்துவான் | : | மதுரை தியாகராஜன் மோகன்ராஜ் |

### நிறைவு நாள் சிறப்பு நிகழ்ச்சி

08.02.2020 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் இந்திய கலைஞர்களும் யாழ்ப்பாண கலைஞர்களும் இணைந்து வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறும். அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் மாண்புமிகு **ஸ்ரீமான் சங்கர் பாலச்சந்திரன்** அவர்கள் கலைஞர்களுக்கான கௌரவங்களை வழங்கிச் சிறப்பிப்பார்கள்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*
*மாவைக் கந்தா போற்றி! போற்றி! நின்பாதம் சரணம்! சரணம்!*

தொ.பேசி:-
0094 (0) 21 2243334

(C-9098)

மாவை ஆதீனம்,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

---

# மரண அறிவித்தல்



## திருமதி தங்கம்மா இரத்தினம்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் துன்னாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா இரத்தினம் அவர்கள் நேற்று (29.01.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் அமரர் இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - குஞ்சரம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சசிகலா, சுசிகலா (ஆசிரியை - யா/துன்னாலை வடக்கு மெ.மி.த.க பாடசாலை), சசிகரன் (சுவிஸ்), சசிதரன் (லண்டன்), காலஞ்சென்ற சாந்தினி மற்றும் சாந்தரூபி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பளை பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சமதர்மபாலன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மணிவண்ணன் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்), ரவீந்திரன் (அதிபர் - கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை), சசிகரன் (ஆசிரியர் - உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), சுதர்சனா (சுவிஸ்), சிந்துஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தங்கராசா (டென்மார்க் தபாலதிபர்), காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கந்தையா, சுப்பிரமணியம், வைரமுத்து (பொலிஸ்), செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சஜிவ் (ஆசிரியர் - யாழ்/இந்துக் கல்லூரி), பிரகாஷ் (பொலிஸ் உத்தியோகத்தர் - காங்கேசன்துறை) - சுமாலினி, சிந்துஜா, பிலிப்நேரி (அவுஸ்திரேலியா), நிரூஜா (ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜனகன் (முகாமையாளர் Kales Systems), துர்க்கா (ஆசிரியை - மன்/கருங்கண்டல் றோ.க.த.க. வித்தியாலயம்), ஹீர்த்தனா (ஆசிரியை - யா/விக்னேஸ்வரா கல்லூரி), கேசவன் (இலங்கை வங்கி, சுன்னாகம்), ஆராதனா (விவசாய பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), பிரியங்கா - ஸ்ரீமோகன் (லண்டன்), பிரிஷாந் (போதகர்), சிவாத்மிகா, சுருதிகா, சுபஸ்திகன், சுபீட்சன், சருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபினயா, ஆகீஸ், ஆஷிகா, ஸ்ரெபனி, அஸ்மிகா, அனிஸ், சுரபிசன் ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2020) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரொண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிதம்பர நிலையம்,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

(9103)

தகவல்: குடும்பத்தினர்
0774192692

# மாகாண சபைகளுக்கு

# பொலிஸ் அதிகாரங்களை வழங்கவே முடியாது

## அரசாங்கத்தின் பேச்சாளர் திட்டவட்டம்



(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தில் இருக்கின்ற பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு ஒருபோதும் வழங்க முடியாது. அது ஒரு சாத்தியமற்ற ஏற்பாடாகவே காணப்படுகின்றது எனத் தெரிவித்த அரசாங்கத்தின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல, எனினும் காணி அதிகாரங்கள் தொடர்பில் ஆணைக்குழுவொன்றை அமைத்து ஆராய முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.**

மாகாணசபை முறைமையில் காணப்படும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவது சாத்தியமான விடயமல்ல. பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் பல்வேறு தேவையற்ற பிரச்சினைகள் உருவாகும். கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைபில் ஒவ்வொரு மாகாணங்களும் தமக்கு ஏற்றவாறு பொலிஸ் சீருடைகளை மாற்ற முடியும் என்ற ஏற்பாடுகளும் காணப்பட்டிருந்தன.

எனவே பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது என்பது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவதாகவே அமையும். உதாரணமாக மேல் மாகாணத்தில் ஒருவர் குற்றத்தை புரிந்துவிட்டு வடமாகாணத்திற்கு சென்றுவிட்டால் உளவுப்பிரிவினர் கூட அந்த சந்தேகநபரை கைது செய்ய வடக்கு முதலமைச்சரின் அனுமதியைப் பெறவேண்டிய நிலைமை ஏற்படும்.

இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு இது பொருத்தமான விடயமாக அமையாது. எனவே பொலிஸ் அதிகாரம் என்பது வழங்கப்பட முடியாததாகவே காணப்படுகின்றது. அதனால் அது தொடர்பில் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் மிகவும் உறுதியாக இருக்கின்றார்.

எனினும் காணி அதிகாரம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கலாம். அதாவது காணி ஆணைக் குழுவை அமைத்து காணி அதிகாரங்கள் தொடர்பில் பரிசீலிக்கலாம். ஆனால் பொலிஸ் அதிகாரம் என்பது சாத்தியமற்றதாகவே உள்ளது.

இதேவேளை வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் பேச்சு நடத்தவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல.

வடக்கு, கிழக்கில் பொது அமைப்புக்கள், உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என மேலும் தெரிவித்தார்.(7-9)

# இந்திய வம்சாவளி மக்களுக்கும் தொழில்வாய்ப்புக்கள் வழங்க வேண்டும்

## முன்னாள் எம்.பி.சதாசிவம் கோரிக்கை



(கொழும்பு)

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் பொருளாதாரத்தை மையப்படுத்தி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் நலன் கருதி கல்வித் தகைமையற்ற ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது.

அந்த வேலைத்திட்டத்தில் இந்திய வம்சாவளி மக்களுக்கும் எவ்வித பாகுபாடின்றி அந்தந்த பிரதேசத்தில் வாழும் சனத்தொகைக்கேற்ப விகிதாசார அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி பொதுச்செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நுவரெலியா தலைமைக் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் உரையாற்றுகையில், கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் வழங்கப்பட்ட அரசாங்க தொழில்வாய்ப்புகளில் இந்திய வம்சாவளி மக்கள் ஓரங்கட்டப்பட்டு எந்தவித தொழில் வாய்ப்பும் வழங்கப்படவில்லை. இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இந்நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்கள் கிடைப்பதில்லை. அரசாங்கத்தால் வழங்கப்படும் உரிமைகளையும் சலுகைகளையும் போராடியே பெற வேண்டிய சூழ்நிலையில் இம்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

பாராளுமன்றத்தில் இந்திய வம்சாவளியினரை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தங்களது சுயநலத்துக்காகவும் தங்களது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாகச் செயற்படுகின்றனர்.

எமது மக்களின் தேவைகளைப் பற்றியோ அல்லது அரசாங்கத்தால் வழங்கப்படும் வரப்பிரசாதங்களையோ எமது மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு அக்கறை செலுத்துவதில்லை. எனவே புதிய ஜனாதிபதியால் அமுல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தில் இந்திய வம்சாவளி மக்களுக்கும் சம உரிமை வழங்கி அவர்களுக்கும் விகிதாசார அடிப்படையில் தொழில்வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கு அக்கறை செலுத்தவில்லை.

எனவே புதிய ஜனாதிபதி இந்தத் திட்டத்தில் இந்திய வம்சாவளி மக்களுக்கும் சம உரிமை வழங்கி அவர்களுக்கும் விகிதாசார அடிப்படையில் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(7-9)

# "கொரோனா வைரஸ்" இலங்கை நிலை என்ன?

## பாராளுமன்ற மேற்பார்வை குழு இன்று ஆராய்வு

(கொழும்பு)

சீனாவில் பரவிய கொரோனா வைரஸ் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கையில் நோய் தொற்றுக்கு உள்ளான ஒரு சீனர் அடையாளம் கண்டிருப்பதனால், "கொரோனா வைரஸ்" தாக்கத்தின் இலங்கை நிலை பற்றி ஆராய சுகாதாரம் மற்றும் மனித நலனோம்பு விடயங்களுக்கான துறைசார் பாராளுமன்ற மேற்பார்வை குழு இன்று அவசரமாகக் கூடவுள்ளதாக குழுவின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் பாராளுமன்ற அமர்வுகள் இல்லாதபோதும் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை இடுவதற்காக சபாநாயகரின் ஆலோசனையின் பேரில் இன்று முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்ற குழு (7) அறையில் அவசரமாக கூட உள்ளது.

இது தொடர்பான அவசர அறிவித்தல்கள் குழுவின் உறுப்பினர்களான ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சுகாதார அமைச்சின் துறைசார் அதிகாரிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வாரம் பாராளுமன்ற அமர்வுகள் கூடுமிடத்து இந்த கூட்டம் தொடர்பான அறிக்கையை தேவை ஏற்படின் சபையில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (7-9)

# வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

விலைக்கட்டுப்பாட்டை கவனத்திற் கொள்ளாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பொறளையிலுள்ள என்.எம். பெரேரா ஞாபகார்த்த நிலையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரை நிகழ்த்தும் போதே நீர் வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரிசியின் விலைக் கட்டுப்பாட்டை சரியான முறையில் அமுல்படுத்தி நுகர்வோர் பயனடைவதற்கு வழிசமைக்கும் வகையில் அரசாங்கம் நெல் கொள்வனவுக்காக 150 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கூட்டுறவுக் கடைகளில் ஒரு கிலோஅரிசி ரூபா 80 முதல் 85 வரை விற்பனை செய்தாலும் ஏனைய கடைகளில் அந்த விலைக் கட்டுப்பாட்டை கவனத்திற் கொள்ளாதிருப்பதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வர்த்தகர்களின் கவனயீனப் போக்குக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அவசியமும் ஏற்பட்டுள்ளது.

எனவே பாவனையாளர் அதிகார சபையை பலப்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என மேலும் தெரிவித்தார். (7-9)



31.01.2020 வெள்ளிக்கிழமை

காரைநகர் பயிரிக்கூடல்
அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்-2020

முருகன் அடியார்களே!

**எமது ஆலயத்தின் மஹோற்சவம் விகாரி வருடம் தை மாதம் 17ம் நாள் (31.01.2020) வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும்.**

**மஹோற்சவ குரு**
**சிவஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள் (ஆலயகுரு)**

**கொடியேற்றம் காலை 10.30 மணிக்கு இடம்பெறும்**

| | | |
|---|---|---|
| 30.01.2020 | வியாழக்கிழமை | சாந்திக்கிரியைகள் |
| 31.01.2020 | வெள்ளிக்கிழமை | கொடியேற்றம் |
| 06.02.2020 | வியாழக்கிழமை | வேட்டைத்திருவிழா |
| 07.02.2020 | வெள்ளிக்கிழமை | பெரியசப்பறம் |
| 08.02.2020 | சனிக்கிழமை | தேர்த்திருவிழா |
| 09.02.2020 | ஞாயிற்றுக்கிழமை | தீர்த்தம்,கொடியிறக்கம் |
| 10.02.2020 | திங்கட்கிழமை | பிராயச்சித்த அபிஷேகம் |
| 14.02.2020 | வெள்ளிக்கிழமை | வைரவர் பொங்கல் |

தினமும் திருவிழா நேரம்
பகல் திருவிழா காலை 8.30 - 12.30
இரவுத் திருவிழா மாலை 6.00 - 9.00

அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
Dr.தேவராணி சங்கரப்பிள்ளை
ஆலய தர்மகர்த்தாவும்; திருவிழா உபயகாரர்கள்.

(2152)


# தொடரை வென்றது இந்தியா



நியூசிலாந்திற்கு எதிரான 3வது ரி-20 போட்டியில் சுப்பர் ஓவரில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.


## மணிவிழா வாழ்த்து



**உயர்திரு.**
**ஐயாத்துரை குகானந்தராசா**
**( கோட்டக்கல்வி அலுவலர், பளை )**

பளைக்கோட்டத்தில் 05 ஆண்டுகள் கோட்டக்கல்வி அலுவலராக அர்ப்பணிப்புடன் கல்விச்சேவையாற்றி இன்றுடன் (30.01.2020) ஓய்வு பெறும் திரு.ஐ.குகானந்தராசா அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### சேவை விபரம்

| | | |
|---|---|---|
| கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் (ஆசிரியர்) | : | 20.01.1989 - 01.05.1994 |
| கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் (கடமை நிறைவேற்றும் அதிபர்) | : | 02.05.1994 - 08.12.2001 |
| கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் (அதிபர்-SLPS-II) | : | 09.12.2001 - 19.01.2003 |
| கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம் (அதிபர்) | : | 20.01.2003 - 09.01.2007 |
| கிளி/பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் (அதிபர்) | : | 10.01.2007 - 14.12.2010 |
| கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் (அதிபர்) | : | 15.12.2010 - 21.06.2015 |
| கோட்டக்கல்வி அலுவலர் - பளை | : | 22.06.2015 - 30.01.2020 |

**வாழ்த்துவோர் :**
**அதிபர், ஆசிரியர்கள்,கல்விசாரா உத்தியோகத்தர்கள்,பளைக்கோட்டம்.**

(c-9100)



# J/ST. CHARLES' MAHA VIDYALAYAM

**Annual Inter - House Athletic Meet 2020**

On Thursday 30th of January 2020
at 1.30 pm in our School Playground

**PRESIDENT**
Mrs.J.Christabel
(Principal)

**CHIEF GUEST**
Mr.Sambasivam Sutharshan
(Divisional Secretary, Jaffna)

**SPECIAL GUESTS**
Rev.Fr.Alvin Kirubakaran
(Asst.Parish Priest St. Mary's Cathedral Church, Jaffna)
Mr.P.Surenthiran (ADE-Spl.Edu.)
(Jaffna Zone)
Mr.K.Sasikaran
(N.R.S Optical, Jaffna)
Mr.A.Kirubakaran
(Director, Kiribaa learners)
Mr.S.Josephbala
(Coordinator-HUDEC Caritas, Jaffna)

*You are cordially invited*

School Community
J/St.Charles' M.V
Jaffna.

(c-9101)



விராட் விஸ்வப் பிரம்மனே நம

**மணிவிழாக் காணும் மயிலையின் மைந்தனை**
**மனதார வாழ்த்துகின்றோம்.**

## செல்லப்பா சிவரத்தினசிங்கம்

கலாலயாவின் சிறப்புக் கலைஞன் மயிலிட்டி செல்லப்பா சிவரத்தின சிங்கம் (சிற்பாச்சாரி) அவர்கள் அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழாக் காணுகின்றார்.



மணிவிழாக் காணும் நாயகனும்
பொன்விழாக் காணும் நாயகியும்
இறையருள் பெற்று பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.

மணிவிழா அரங்கு : துர்க்கா மணி மண்டபம், நல்லூர்
(30.01.2020) வியாழக்கிழமை மாலை 6மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**கலாலயா, மயிலிட்டி**
**0773385353**

(2157)

# இலங்கையர் அனைவருக்கும் Video புரட்சியினை வழங்கும்

# 4G Video BLASTER

# UNLIMITED YouTube

உடன் ஏனைய சேவைகளுக்கு மேலதிகமாக 3.5GB* டேட்டா இலவசம்

## ரூ. 249/- மட்டுமே

செல்லுபடியாகும் காலம் – 30 நாட்கள், வரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது



TRC/D/PRO/19/05

**4G Video Blaster இனை செயற்படுத்திக்கொள்ள,**

- உங்களுக்கு Dialog 4G SIM அட்டையுடன் (முற்கொடுப்பனவு அல்லது பிற்கொடுப்பனவு) 4G தொலைபேசி அவசியமாகும்
- MyDialog App, www.dialog.lk ஊடாக அல்லது #678# டயல் செய்து செயற்படுத்திக்கொள்ளுங்கள்
- நீங்கள் முற்கொடுப்பனவு வாடிக்கையாளராயின் ரூ. 249 ஐ ரீலோட் செய்யுங்கள்

4G ஸ்மார்ட்போனில் செயற்படுத்தப்பட்டுள்ள unlimited video சேவையினை SD Video தரத்தில் பார்வையிட முடியும்
Tab அல்லது பெரிய திரையினை கொண்ட சாதனங்களில் ஏனைய டேட்டா பக்கேஜ்களை செயற்படுத்திக்கொள்வதன் மூலம் HD Video தரத்தில் பார்வையிட முடியும்

twitter.com/dialoglk facebook.com/dialog.lk • நிபந்தனைகளுக்கு உட்பட்டது *Anytime, Night Time & Anytime 4G போனஸ் உள்ளடக்கப்பட்டுள்ளது

உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான
இன்டர்நெட் சேவை வழங்குனர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2019

இலங்கையின் முதற்தர வலையமைப்பு

Dialog

an axiata company www.dialog.lk எதிர்காலம் இன்றே.

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இசையிலும் நடனத்திலும் அதிக ஆர்வம் கொண்ட இளைஞர்கள். யுவதிகளுடைய கனவுகளை நிஜமாக்கும் மாபெரும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் MTV தொலைக்காட்சியின் வர்ணனையில் பாடல் மற்றும் நடனப்போட்டிகளை நடத்துவதற்கான சகல வேலைத்திட்டங்களும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை மருதனார்மடத்திலுள்ள வட இலங்கை சங்கீத சபையின் கலை கலாசார (NCO) மண்டபத்தில் முதற்சுற்று இடம்பெறவுள்ளது.

எனவே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களை தத்தமது பிரதேச செயலகங்களிலோ, கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலோ, அருகிலுள்ள இராணுவ முகாம்களிலோ அல்லது இப் போட்டியின் முதற் சுற்று இடம்பெறவுள்ள மண்டபத்திலோ பெற்றுக்கொள்ள முடியும்.

**போட்டியாளர்களுக்கான விதிமுறைகள்**

01. 18 தொடக்கம் 32 வயதுக் குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

02.வரையறையற்ற திறந்த முறையினை கொண்ட இசை நடனப்போட்டியாகும்.

03. நடனமானது தமிழ் கலாசாரத்தை பின்பற்றியதாகவோ அல்லது பரதநாட்டியமாகவோ மாத்திரம் இருத்தல் வேண்டும்.

04.நடனத்தில் பங்குபற்றுபவர்கள் தமது நடனத்தை வழங்கும்போது அவற்றிற்கான பின்னணி இசையானது இறுவெட்டுக்களின் மூலமோ ஒலி நாடாக்களின் மூலமோ இசைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

05.யாழ்.மாவட்டம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## வியாபார போட்டிகளில் வெற்றி தரும் குறியீடு



வியாபாரத்தைக் குறிக்கும் கிரகம் புதனாகும். போட்டியைக் குறிக்கும் இராசி கன்னி இராசியாகும். புதனுக்கும் ஒரு ஆட்சி வீடாகவும் மூலத்திரிகோண வீடாகவும் உச்ச வீடாகவும் அமைந்துள்ளது கன்னி இராசியாகும். புதன் கன்னி இராசியில் அத்தம் நட்சத்திரத்தில் உச்சமடைகிறார். அத்தம் நட்சத்திரத்தின் அதிபதி சந்திரனாகும். சந்திரனுக்கு பரிகாரஸ்தமாக திருப்பதியைக் குறிப்பிடுவர்.

உச்ச புதன் நின்ற கோலத்திலிருக்கும் விஷ்ணுவைக் குறிக்கும். திருமலையில் வேங்கடநாதன் நின்ற கோலத்திலிருக்கிறார்.

எனவே திருப்தி வேங்கடநாதனை தரிசித்தால் வியாபார போட்டிகளில் வெற்றியடையலாம். வியாபாரிகள் தங்கள் வீடுகளிலும் வியாபார நிறுவனங்களிலும் திருப்பதி வேங்கடநாதனின் படத்தை வைத்திருத்தால் வியாபாரம் நல்ல முறையில் நடக்கும்.

பொதுவாக வியாபாரிகள் நின்ற கோலத்திலிருக்கும் விஷ்ணுவை வழிபட்டு வரவேண்டும்.

# தகவல் கோரல்



(யாழ்ப்பாணம்)

நடராஜா மனோரஞ்சன் என்பவர் 09.12.2019 ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை உளநல விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவர் தொடர்பான எந்தவொரு தகவல்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ளது. எனவே இவர்களைப் பற்றியும் இவரது உறவினர்கள் பற்றியும் தகவல் அறிந்தவர்கள்:- உளநலவிடுதி, ஆதார வைத்திய சாலை, தெல்லிப்பழை. 021 224 3799, 021 222 6666 தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# "கிராமத்துக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" வீட்டுத்திட்டத் தெரிவு முறை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"கிராமத்துக்கு ஒரு வீடு வீட்டுத்திட்டத்தின் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப்படுத்தும் விதமாக "கிராமத்துக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" என்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இவ் வீட்டுத்திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக தெரிவு முறையாக நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டுள்ள போதிலும் நிரந்தர வீடு இல்லாத சொந்தக் காணியுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பமாக இருக்க வேண்டும்.

பெண் தலைமைத்துவக் குடும்பமாக இருத்தல் அல்லது மாற்றுத்தினாளிகள் அல்லது நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ள குடும்பங்களாக இருத்தல்.

தங்கி வாழ்வோர் எண்ணிக்கை கூடுதலாக இருத்தல் மற்றும் பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்கள் கூடுதலாக இருத்தல் வேண்டும்.

புதிய வீடு அமைப்பதற்காக சுமார் 6 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுவதோடு இத் தொகைக்குள் நீர் முத்திரை இடப்பட்ட மலசலகூடமும் அமைக்கப்படல் வேண்டும்.

வீடுகள் ஒவ்வொன்றும் 550 சதுர அடியைக் கொண்டதாக அமைக்கப்படுவதோடு குறைந்த வசதிகளைக் கொண்ட வீட்டினை மேம்படுத்த தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசுக்கு அமைய தலா 3 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படலாம் என யாழ்.மாவட்டச் செயலகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-10)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப. பார்த்தீபன், யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர் சி.ரஞ்சித்குமார், சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## இராசி பலன்

**மீனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், திடீர் பயணத்தால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள்.

**மேடம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுக்குத்தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சஞ்சலங்கள் சற்று கூடும் நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தெலைபேசிவழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| சுக் புத | இராசி பலன் கிரகநிலை | | |
| சூரி, | சந்திராஷ்டமம் மகம், பூரம் | | |
| சனி, குரு.கேது | செவ் | | |

**30.01.2020**
தை 16, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 12.13 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 2.17 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை
சஷ்டி விரதம்,சுபமுகூர்த்த தினம்
ஒரு நல்ல புத்தகம் தலைசிறந்த ஆன்மாவின் விலைமதிப்பற்ற உயிர்த்துடிப்பு -
**வளவன்**

**கடகம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ஆரோக்கியம் சீராகும், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டியநாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** திட்டமிட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**விருச்சிகம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், விரும்பிய பொருட்களை வாங்க பிரியப்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம்.

# ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்

## தினேஷ் திட்டவட்டம்





(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை அறிவிப்பாரென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் தினேஷ் குணவர்த்தன மேலும் கூறியுள்ளதாவது, "தற்போது நாட்டில் பலமான நாடாளுமன்றம் ஒன்றே அவசியமாகும்.


அதாவது கடந்த ஆட்சியாளர்கள் உருவாக்கிய சட்ட திட்டங்களால் முழு நாடும் குழம்பிய நிலையிலேயே உள்ளன.

இதனை ஒழுங்கமைக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. எனவே மார்ச் முதலாம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

மேலும் புதிய நாடாளுமன்றத்தின் ஊடாகவே நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# அரசியலமைப்புச் சட்டம் எமக்கானதாக இருக்க வேண்டும் வேறு எந்த நாட்டின் பிரதியாக இருக்கக் கூடாது

## விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து எப்படியான அழுத்தங்கள் வந்தாலும் வேறு நாடு ஒன்றின் அரசியலமைப்பில் பிரதியில்லாத புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

ஹொரணை, மதுராவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

எமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டமானது பழுதான, பாழ்பட்ட கரைந்து போன அரசியலமைப்புச் சட்டம்.

தற்போதாவது அனைவரும் இணைந்து புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நாட்டுக்காக உருவாக்க வேண்டும். எனினும் இந்த அரசியலமைப்புச் சட்டத்தை குழுக்களும் தேவையான முறையில் உருவாக்கக் கூடாது.

இனங்களாக, மதங்களாக இருக்கலாம். எமது நாட்டில் காலம் காலமாக இருக்கும் சிங்களம் மற்றும் பௌத்தத்திற்கு கௌரவம் வழங்க வேண்டும்.

அதேபோல் ஏனைய மதங்கள், இனங்களை மிதிக்காத படி கௌரவத்தை கொடுக்க வேண்டும்.

ஒற்றுமையின் மூலமே புதிய நாட்டை கட்டியெழுப்ப முடியும். புதிய அரசியலமைப்புச் சட்டம் வேறு ஒரு நாட்டின் அரசியலமைப்பின் பிரதியாக இருக்கக் கூடாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஜ-2)

# பிணைமுறி மோசடி விவகாரம்; ஒரே நட்பு நிறுவனத்தின் வேலை

## சமீர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பிணைமுறி மோசடி என்பது ஒரே நட்பு நிறுவனத்தின் வேலை எனத் தேசிய மக்கள் சபையின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி ஓரிடத்தில் ஒரு காலத்திற்கு ஒரு அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட மோசடியல்ல எனவும் ஒரே நிறுவனம் செய்தது என்பது தற்போது தெரியவந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த மோசடி என்பது ரணில் காலத்திலும் நடந்துள்ளது என்பதுடன் மகிந்த ராஜபக்ஷ காலத்திலும் ஒரேவிதமாக நடந்துள்ளது எனவும் சமீர பெரேரா சுட்டிக்காட்டினார். (ஜ)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வாடகைக்கு

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட Annex இல் 2 அறைகள் வாடகைக்கு. தபால்பெட்டிச் சந்தி - திருநெல்வேலி UNIVERSITY STUDENTS (பெண்பிள்ளைகள்) விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 820 3754 (2145)

## தேவை

வேலை ஆட்கள் தேவை (பெண்)
யாழ்ப்பாணம் - கோண்டாவில்

தொடர்பு:- 077 673 7956 (2146)

## இறை அருளால் இலவச திருமணம்

இராஜமாணிக்கம் SMT அறக்கட்டளை மூலம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் கோட்பாட்டுக்கு இணங்கி சாதி சமய வேறுபாடுகளின்றி அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு வழிகாட்டும் ஓர் நிகழ்வாகும். தாய், தந்தையரை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் இறைவனின் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய இறையருள் கைகூடியுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆறு திருமணங்கள் நடைபெறவுள்ளன. இதற்கு முன்னோடியாக இவ்வருடம் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம். வைகாசி மாதம் நடக்கும் இரவு திருமண விழாவில் கலந்து கொள்ளும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் கல்யாண சாப்பாடு வழங்கப்படும்.

- மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ஆறு திருமணங்களும் பெரியோர்களால் மஞ்சள் கயிற்றில் தாலி எடுத்து கொடுக்க ஒரே மேடையில் தமிழ் சம்பிரதாய முறைப்படி திருமணம் நடைபெறும்.
- திருமணத்திற்கான பட்டுப்புடைவை, வேட்டி சால்வை, மஞ்சள் கயிற்றில் ஒரு பவுண் தாலியுடன் வீட்டிற்கான சமையல் பாத்திரங்களும் வழங்கப்படும்.
- இறைவனின் குழந்தைகளுக்கு சாத்திர பொருத்தம் தேவையில்லை.
- மாற்றுத்திறனாளிகள் ஏற்கனவே திருமணம் நிச்சயித்திருப்பின் இருவரது புகைப்படத்துடன் நேரில் வரவும்.
- திருமணம் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் 02.02.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து 12.00 மணிவரை பாதுகாவலருடன் நேரில் வாருங்கள்.

இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்,
வீடியோ கலாமினி, அச்சுவேலி.
தொ.பே: 077 305 3080 (1759)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/ 10428 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc, PhD (Following) - China<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ: G/ 10448 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 44 செவ் 4 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: A/L, Canada<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு PR<br>தொ.இ: B/ 10430 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, HR Assistant<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/ 10451 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: O/L, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/10431 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 55 ¾ உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: M.Sc, ஆராய்ச்சியாளர் & பகுப்பாய்வாளர் - Malasiya<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச/தனியார் விரிவுரையாளர், கணக்காளர்<br>தொ.இ: G/ 10454 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரம் 2<br>கி.பா: 32 ½<br>உயரம்: 184cm<br>தகைமை/தொழில்: B.Sc, Quantity Surveyor - Singapore<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/ 10432 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Dip.in Civil Engineering, பட வரைஞர்<br>எதிர்பார்ப்பு: படித்த தொழில் புரியும் வரன்<br>தொ.இ: G/ 10457 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி

# முல்லைத்தீவு மாவட்டம் நேற்று முடக்கம்

### மக்களின் போராட்டம் வெற்றி











(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் பிரச்சினைக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை அடுத்து தற்காலிக தீர்வு கிடைத்துள்ளது.**

முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி முல்லைத்தீவு நகர மற்றும் கரையோர மக்கள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து பின்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக உடனடியாக போராடத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சுகந்தன். மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் பேசிமுடிவுகளை பெறுவோம் என வாக்குறுதி வழங்கிய போதிலும் இன்றைய தினமே வைத்தியர் குறித்த வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட வேண்டும். இல்லையேல் தொடர் போராட்டமாக இங்கே அமர்ந்திருந்து போராடுவோம் என மக்கள் உறுதியாக தெரிவித்தனர்.

அதனையடுத்து போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் போராட்டத்தில் ஈடுபட்ட சிலரை அழைத்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கலந்துரையாடலின் இறுதியில் ஏற்கனவே பிரதியீடு இல்லாமல் இடமாற்றம் செய்யப்பட்ட வைத்தியர் உடனடியாக மீள நியமிக்கப்படுவார் என்றும் 24 மணித்தியால சேவையை வழங்கும் வகையில் மேலும் ஒரு வைத்தியர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையிலிருந்து வரவழைக்கப்பட்டு நியமிக்கப்படுவார் என்றும் இந்த இரண்டு நியமனாங்களும் உடனடியாகவே வழங்கப்படும் என்றும் பெப்ரவரி மாதம் நிரந்தர வைத்தியர்கள் நியமனம் இடம்பெறும் வரை இந்த நடவடிக்கை தற்காலிகமானதாக செயற்படுத்தப்படும் எனவும் குறித்த பிரதேச வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி குறித்து வைத்தியசாலை அபிவிருத்தி குழு ஒன்றும் அமைக்கப்படும் எனவும் பணிப்பாளரால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதனையடுத்து மக்களின் தொடர் போராட்டம் கைவிடப்பட்டது. இந்த போராட்டம் காரணமாக முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள். பொதுச் சந்தை அனைத்தும் மூடப்பட்டு பூரண ஆதரவு வழங்கப்பட்டது. மேலும் கடற்றொழிலாளர்கள் எவரும் கடலுக்கு செல்லவில்லை. இதனால் முல்லைத்தீவு நகரம் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது. (9)

## நடமாடும் மருத்துவ முகாம்



(நெளுக்குளம்)

வவுனியா நகரசபை உறுப்பினரான சுந்தரலிங்கம் காண்டீபனின் ஒழுங்கமைப்பில் வவுனியா திருநாவற்குளம் கிராம மக்களுக்கான நடமாடும் மருத்துவ முகாம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. வவுனியா பொது வைத்தியசாலையின் மருத்துவர் வைத்திய கலாநிதி பிரசன்னாவின் தலைமையிலான குழுவினரால் குறித்த முகாம் இடம்பெற்றது. குறித்த மருத்துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டு தொற்றா நோய்கள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் வவு.குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டன



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாக மாவட்டத்தின் பல்வேறு குளங்களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகத்தினரால் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்திட்டத்தின் அடிப்படையில் தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தின் காத்தார் சின்னகுளம், பெரியார் குளம், கருப்பனிச்சான் குளம், அலபத்த குளம், அழகர் சமளங்குளம் ஆகிய குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

குறித்த திட்டத்தை அமைச்சர் சார்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாக செயலாளர் குலசிங்கம் திலீபன் தலைமையிலான பிரதிநிதிகள் கலந்து கொண்டு முன்னெடுத்திருந்தனர்.

பருவகால நீர்த் தேக்கங்களை மையப்படுத்தியதான நடைமுறைப் படுத்தப்படும் இந்த திட்டத்தினூடாக விடப்படும் மீன்கள் எதிர்வரும் மே மாதமளவில் அறுவடைக்கு தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (9)



## பகிரங்க அறிவித்தல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்குகளில் உள்ள மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்தி சான்றுப்பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு பதிவாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின்னர் எதுவித முன்னறிவித்தலுமின்றி சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சான்றுப் பொருட்களாக மோட்டார் சைக்கிளின் வழக்கு இலக்கம் மற்றும் வாகன இலக்கங்கள் முறையே, வழக்கு இல- B/1106/19 வாகன இல-NP XK-3750, வழக்கு இல- B/1106/19 வாகன இல-NP BHL-2916, வழக்கு இல- 34457/MT/19 வாகன இல-EN No.MEIRG47494 JOO28453 Ch No.G3J3EO354635, வழக்கு இல- 34780/MT/19 வாகன இல-NP BHF-3948, வழக்கு இல-33490/ MT/19 வாகன இல-NP XK-3750, வழக்கு இல-35048/FOR/19 வாகன இல-EN No. DHPWJ81774 Ch No. MD2A11CY6JWL42182, வழக்கு இல- 35596/MT/19 வாகன இல-143-6382, வழக்கு இல- 355 46/MT/19 வாகன இல-NC HN-4841, வழக்கு இல- B/999/19 வாகன இல-NP WO-5389, வழக்கு இல-34060/MT/19 வாகன இல-CP MI-9154, வழக்கு இல- 35216/MT/19 வாகன இல-NP WZ-7151, வழக்கு இல- 33820/MT/19 வாகன இல-NP XJ-0457, வழக்கு இல- 35688/MT/19 வாகன இல-WP UR-5716, வழக்கு இல-36124/MT/19 வாகன இல-NP BHP-3763, வழக்கு இல- 34507/MT/19 வாகன இல-NP BBX-9809. (9)

## வவு.வேப்பங்குளத்தில் கஞ்சா விற்பனை; எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா வேப்பங்குளம் 6 ஆம் ஒழுங்கையில் வசிக்கும் குடும்பத்தினர் கஞ்சா விற்பனை செய்வதாக தெரிவித்து வேப்பங்குளம் மக்கள் நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

சுமார் இரண்டு மணிநேரம் தொடர்ந்த போராட்டத்தில் எமது ஊரில் கஞ்சா வேண்டாம், எங்களிடம் கஞ்சாவை விற்காதே, கஞ்சா ஒழிக, சிறுவர்களுக்கு கஞ்சா கொடுக்காதே என்ற கோசங்களை எழுப்பியவாறு பதாகைகளை ஏந்தி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டார். அதன்போது குறித்த கிராம மக்கள் கஞ்சா வியாபாரம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடுகள் தெரிவித்தும் கடமையில் இருந்த பொலிஸார் முறைப்பாட்டை பெற்றுக் கொள்ளவில்லையென பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து குறித்த கஞ்சா வியாபாரத்தை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் முறைப்பாட்டைப் பெற்றுக்கொள்ளாத பொலிஸ் அதிகாரிக்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தமையைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது. (9-250-299)

# காணி அபகரிப்புக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்





(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் அதிகாரத்தை பயன்படுத்தி பொது மக்களின் காணிகளை அபகரித்த அதிகாரிகளை கண்டித்து வடக்கு மாகாண மக்கள் திட்ட ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் அரசே யுத்தத்தால் இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக இருக்கும் மக்களின் காணிகளை அபகரிக்காதே, காணி விற்பனையால் கிடைத்தது எத்தனை கோடி, காணி ஊழல்வாதிகளை வீட்டுக்கு அனுப்பு போன்ற கோசங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கும் போது,

காணி மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரி இடமாற்றப்பட்டுள்ளார். எனினும் அவரை பணி இடைநிறுத்தம் செய்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அரசியல்வாதிகளினால் இம் மோசடிகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்படாத நிலையில் சாதாரண மக்களே இவ் விடயங்களை ஆதாரத்துடன் வெளிப்படுத்தியிருந்தனர். வன்னியை சேர்ந்த 6 பாராளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ இது தொடர்பில் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர்.

உயர் அதிகாரிகளின் ஊழல்கள் இவ்வாறே மறைக்கப்பட்டு வருகின்றன. எனவே இதில் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள், குடியேற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் விசாரணை செய்ய வேண்டும்.

மக்கள் தாமாக துணிந்து வந்து முறைப்பாடு செய்ய ஆவன செய்யப்படவேண்டும். இன்று இந்தியாவில் உள்ளவர்களின் காணிகளில் கிரவல் அகழப்படுகின்றது. இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும். ஊழல் அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

எனவே நாம் 3 கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். அவையாவன காணி சம்பந்தமான விசாரணை ஆணைக்குழு நிறுவ வேண்டும். அது வடக்கில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்கள் வாரியாகவும் விசாரணை நடத்த வேண்டும் மற்றும் இந்தியாவில் உள்ள எங்களது மக்களின் காணிகளை எந்த பாவனையும் இல்லாமல் பாதுகாக்க வேண்டும் அடுத்து ஊழல் அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம் எனவும் தெரிவித்தனர். (9-250-299)

## செட்டிகுளத்தில் காட்டு யானைகள் தொல்லை; பயிர்கள் சேதம்-விவசாயிகளுக்கு பெரும் நட்டம்

(கண்டாவளை)

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்போக பயிர்ச்செய்கை மற்றும் உழுந்து செய்கைகளை காட்டு யானைகள் தொடர்ச்சியாக சேதப்படுத்தி வருவதனால் தமது ஜீவனோபாயமான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்திற்குட்பட்ட அரசடிக்குளம், தட்டான்குளம், கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், முகத்தான்குளம், கப்பாச்சி போன்ற பகுதிகளில் வாழும் 90 வீதமான குடும்பங்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இப்பிரதேசங்களில் உள்ள மக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார பயிர்ச்செய்கைகளை காட்டு யானைகள் தொடர்ந்து அழித்து வருகின்றன.

இவ்வாறு காட்டு யானைகளின் தாக்கத்தினால் தினமும் பெரும் அழிவுகளை எதிர்நோக்கி வருவதாக மேற்படி பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாங்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றபோதும் அதற்கான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ள பிரதேச மக்கள் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச செயலகத்தினால் ஒரு தேசிய அடையாள அட்டைக்கு தலா இரண்டு யானை வெடிகள் வழங்கப்படுகின்றன.

அவற்றை கொளுத்தினாலும் யானைகள் கட்டுப்படுவதில்லை. வெளிச்சங்களை பயன்படுத்தி யானைகளைத் துரத்தினால் காடுகளுக்குள் செல்லாமல் எங்களை நோக்கியே வருகின்றன. இதனால் உயிர் அச்சம் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை உழுந்து மற்றும் வீடுகளில் காணப்படுகின்ற தென்னை, வாழை, பலா போன்ற பயிர்களையும் அழித்து வருகின்றன. எனவே இவற்றுக்கான இழப்பீடுகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் செட்டிகுளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிக்கையில், செட்டிகுளம் பிரதேசத்தில் பிரதானமாக செய்கை பண்ணப்படும் பயிர் உழுந்துச் செய்கையாகவே காணப்படுகின்றன. இவ்வாறான செய்கைகளில் யானை அழிவுகள் அதிகம் காணப்படுகின்றன. இவ்வாறான பாதிப்புக்கள் தொடர்பில் விவசாயிகளால் கமநல சேவை நிலையத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பயிர்ச்செய்கைகளுக்கான காப்புறுதிகள் செய்யப்படாததால் நட்டஈடுகளை வழங்க முடியாதநிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் காப்புறுதி செய்த விவசாயிகளுக்கு இவ்வாறான இழப்பீடுகளை வழங்கியுள்ளோம். எனவே இனிவரும் காலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் காப்புறுதிகளை எமது திணைக்களத்தில் அல்லது தனியார் நிறுவனங்களில் செய்து கொள்வதன் மூலம் இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

## மரம் நடுகைத் திட்டம்



வவுனியா நீர்ப்பாசன திணைக்களத்தினால் குளப் பகுதிகளில் மரநடுகைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டு வவுனியா குடியிருப்பு குளத்தின் அருகமையில் மரங்களை நாட்டியிருந்தனர். சுற்றுச்சூழல் மற்றும் குளப் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இம் மரநடுகைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## முல்லை.பெரியகுளம் கிராமத்தில் மக்கள் முழுமையாக குடியேறினால் பாடசாலையை இயங்க வைக்க முடியும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு பெரியகுளம் கிராமத்தில் மக்கள் முழுமையாக குடியேறாமையினாலே பெரியகுளம் பாடசாலை மூடப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கோட்ட கல்வி அலுவலர் த.பங்கயற்செல்வன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒட்டுசுட்டான் கோட்டத்தில் இருபத்தேழு பாடசாலைகள் உள்ளன. பெரியகுளம் பாடசாலை மட்டும் மூடப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் இக் கிராமத்தில் மக்கள் முழுமையாக குடியேறவில்லை. மக்கள் முழுமையாக குடியேறி மாணவர்கள் தொகை அதிகரிக்குமானால் பாடசாலையினை இயங்க வைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஒட்டுசுட்டான் கோட்டத்தில் ஆசிரிய நெருக்கடி காணப்படுகின்றது. ஆரம்பப் பிரிவு வகுப்புகளிலேயே கூடுதலான ஆசிரிய நெருக்கடி காணப்படுவதாகவும் தெரிவித்தார். முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சென்று வருவதில் போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது.

இதனடிப்படையிலேயே ஒதியமலைப் பாடசாலைக்கு அந்த மாவட்டத்தினைச் சேர்ந்த ஆசிரியர்களை பணிக்கும் நியமிக்கும்படி பெற்றோர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்குக் காரணம் பிற மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களினால் கிராமப் புறப் பாடசாலைகளுக்கு போக்குவரத்து செய்வதில் நெருக்கடி காணப்படுகின்றது. துணுக்காய் கல்வி வலயத்தில் பதினைந்து வரையான பாடசாலைகளில் ஆசிரிய விடுதிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (9-350)

## வட்டுவாகல் நில அபகரிப்பு வழக்கு மே.18 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(நெளுக்குளம்)

நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் தொடர்பான வழக்கில் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜராகாத இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஜெ.பீற்றர் இளஞ்செழியனுக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்க சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக மேற்குறிப்பிட்ட உறுப்பினர் மற்றும் வட்டுவாகல் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.சண்முகலிங்கம் ஆகியோர் மீது முல்லைத்தீவு பொலிஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

குறித்த வழக்கு கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதன்போது நீதிமன்றத்தில் ஆஜராகாதமையால் அ.ஜெ.பீற்றர் இளஞ்செழியனை கைது செய்யுமாறு நீதவான் பிடியாணை உத்தரவை பிறப்பித்து இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வாறாக பிடியாணை பிறப்பித்த நிலையில் நேற்று முன்தினம் அவர் தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் ஆஜராகி பிடியாணை இரத்துச் செய்துள்ளதாக தெரிவித்தார். (9-299)




## நெல்லை அறா விலைக்கு விற்ற பின்னரா நிர்ணயவிலை அறிவிப்பீர்கள்?-விவசாயிகள் கேள்வி

(சிவநகர்)

நெல்லிற்கான உத்தரவாத விலை சம்பா கிலோ 50 ரூபா, நாட்டரிசி கிலோ 50 ரூபா எனக் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் உட்பட வடமாகாணம் முழுமையாக அறுவடை செய்யப்பட்டு தரகர்கள் மூலமாகவும் தனியார் மூலமாகவும் அறாவிலைக்கு விவசாயிகளால் நெல் விற்பனை செய்யப்பட்ட பின்னர் தான் இந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமா? எனவும் தென்மாகாணத்தை கருத்திலெடுத்தே காலம் தாழ்த்திய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? எனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதுமட்டுமன்றி தென் பகுதியில் ஒரு மூடை நெல் 65 தொடக்கம் 69 வரையிலான கிலோ நிறையில் கொள்வனவு நடைபெறும் போது வடமாகாணத்தில் மட்டும் ஒரு மூடை நெல் 75 கிலோ வீதம் கொள்வனவு செய்யப்படுகின்றது. இது எந்தவகையில் நியாயமானது எனவும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கணக்கிடும் போது சாதாரண ஒரு விவசாயி ஒரு ஏக்கர் வரையிலான நெல்லை கொள்வனவாளர்களுக்கு தானமாக வழங்கி வருகின்ற நிலைமையே காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (9-259)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/புத்தூர் சிறிசோமஸ்கந்தா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் செ.இளங்கோ தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதி அதிபர் சிவலீலாதேவி வடிவேலு, சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஸ்,பொறியியலாளர் ம.ரேகாதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

•••••••••••••••••••••••

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி ச.சிவகுமார் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகண உதவிக்கல்விப் பணிப் பாளர் (உடற்கல்வி) இ.ராஜசீலன், சிறப்பு விருந்தினராக விக்ரோறியாக் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி. தி.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

•••••••••••••••••••••••

(கொடிகாமம்)

மந்துவில் றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லு நர் போட்டியும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் சி.பவளேந்திரன், சாவகச்சேரி ஸ்ரார் ஹோட்டல் உரிமையாளர் வே.சிவநிதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

## இல்ல மெய்வல்லுநர் போட்டியும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும்

(சாவகச்சேரி)

யா/மிருசுவில் அ.த.க.பாடசா லையின் செயற்பட்டு மகிழ் வோம் நிகழ்வும் இல்ல மெய் வல்லுநர் போட்டியும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் க.கஜேந் திரன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக சாவகச்சேரி கோட்டக்கல் விப் பணிப்பாளர் வ.நடராசா கல ந்து கொள்வார். (ஜ-5-30)

•••••••••••••••••••••••

(சாவகச்சேரி)

யா/போக்கட்டி அ.த.க.பாடசா லையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாட சாலை மைதானத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட் சிக் கல்வி வலய உடற்கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் கி.பிர தீபா, கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை உப தவிசாளர் செ.மயூரன், தென்ம ராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திரு மதி இ.மயில்வாகனசிங்கம் ஆகி யோர் கலந்து கொள்வர். (ஜ-5-30)

## கொரோனா வைரஸ் தொடர்பாக இனங்காணப்பட்டவர் குணமடைவு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பாக இனங்காணப்பட்ட 43 வயதான சீனப் பெண், சிகிச்சையைத் தொடர்ந்து முழுமையாக குண மடைந்துள்ளார்.

ஐ.டி.எச்.வைத்தியசாலை நிர்வாகம் நேற்று புதன்கிழமை இதனை உறுதிப்படுத்தியது.

கொரோனா வைரஸால் பாதி க்கப்பட்ட குறித்த சீனப் பெண் தவிர, மேலும் 7 பேர் அங் கொடை தொற்றுநோயியல் பிரி வில் (ஐ.டி.எச்.) சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையில் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட சீனப்பெண் சிகிச்சைகளை அடு த்து குணமடைந்துள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது. (ஜ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய (வடலி யம்மன் கோவில்) வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பதினொரு தினங்கள் இம் மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சப்பறத் திருவிழாவும், 8 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் தேர்த்திரு விழாவும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி யளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5-18)

# விசேட தேவையுடைய இராணுவ வீரர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும்

### ஜம்புரேவெல சந்த ரத்ன தேரர் கோரிக்கை



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் களின் உணவுக்காக செலவு செய்யும் பணத்தை தியாகம் செய்தாவது விசேட தேவையு டைய இராணுவ வீரர்களின் ஓய்வூதியப் பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டுமென ஜம்புரே வெல சந்தரத்ன தேரர் தெரிவித் தார். கண்டியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன் றில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ)

## கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களுக்கு பொதுமன்னிப்பு

(பியாங்யாங்)

கொரியாவில் சட்டவிரோத மாக தங்கியிருக்கும் தொழிலா ளர்களுக்கு தண்டனையின்றி தமது நாடுகளுக்கு செல்வதற் கான பொது மன்னிப்புக் கால மொன்று பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது.

அதற்கமைய இந்தப் பொது மன்னிப்புக்காலம் 2019 டிசெம்பர் 11 ஆம் திகதி அறிவிக்கப்பட் டுள்ள நிலையில், அது எதிர்வ ரும் 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

விசாக்காலம் நிறைவடைந்த நிலையில், சட்டவிரோதமாக கொரியாவில் தங்கியிருக்கும் நபர்கள் இந்தப் பொதுமன்னிப்பு காலப்பகுதியில் பயணச் சீட்டு, தன்னார்வ அறிக்கை மற்றும் தங்குமிட பாஸ் ஆகியவற்றை பிரதேசத்தில் அமைந்துள்ள குடி வரவு அலுவலகத்தில் சமர்ப்பித்த பின்னர், எவ்வித அபராதமும் இன்றி அந்நாட்டில் இருந்து வெளியேற வாய்ப்பளிக்கப்பட்டுள் ளது.

அதேபோல குறித்த நபர்கள் தடுப்புப்பட்டியலிலும் இணைக்கப் படமாட்டார்களென தெரிவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## ஊடகவியலாளர்களை நினைவுகூரும் கறுப்பு ஜனவரி நிகழ்வு

(கொழும்பு)

ஊடக சுதந்திரத்துக்காக உயி ரைத் தியாகம் செய்த ஊடகவிய லாளர்களை நினைவுகூரும் கறுப்பு ஜனவரி நிகழ்வு கொழும் பில் அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள லிப்டன் சர்க்கஸில் குறித்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண் டோர், இதுவரை காலமும் படு கொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர்கள் மற்றும் கடத்தி காணா மலாக்கப்பட்டோரின் புகைப்படங் களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.

அத்துடன் படுகொலை செய் யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்க வேண்டு மெனவும் அரசாங்கத்திடம் கோரி க்கை விடுத்தனர்.




குறித்த நிகழ்வில் அதிகளவான ஊடகவியலாளர்கள் பங்கேற் றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# கார்-ஆட்டோ விபத்து ஒருவர் படுகாயம்



(ஹற்றன்)

ஹற்றன் - பொகவந்தலாவ பிரதான வீதியின் டிக்கோயா பகுதியில் வெளிநாட்டு சுற்று லாவாசிகள் பயணித்த சொகுசு காருடன், ஆட்டோ ஒன்று மோதி விபத்திற்குள்ளானது.

குறித்த விபத்து நேற்றைய தினம் நண்பகல் வேளையில் இடம்பெற்றதுடன், இந்த சம்பவத் தில் ஒருவர் காயமடைந்துள் ளதாக பொலிஸார் தெரிவித்த னர்.

இதில் ஆட்டோ சாரதியே காயமடைந்ததுடன், அவர் டிக் கோயா மாவட்ட வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டார்.

ஆட்டோ வேகமாக பயணித்த நிலையில் சாரதியின் கட்டுப் பாட்டை இழந்ததாலேயே விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

# பொலிஸ் காவலரண் அமைக்கக்கோரி யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்குள் பொலிஸ் காவலரண் அமைக்கக்கோரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கையின் போது பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கையில் சாரதிகள், நடத்துநர்கள், காப்பாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராக்கள் செயலிழந்த நிலையில் நாளாந்தம் வருகை தரும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பேருந்து நிலையத்தில் இடம்பெறும் சமூகவிரோத செயல்களை கட்டுப்படுத்த பேருந்து நிலையத்துக்குள் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தைச் சேர்ந்த சாரதிகள், காப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பாதுகாப்பு கூட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் அதிக சமூக விரோத செயல்கள் இடம்பெறுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணம் மாநகருக்கு வரும் தனியார் கல்வி நிலைய மாணவ, மாணவிகள் முகம் சுழிக்கும் வகையில் நடந்து கொள்கின்றனர். எனவே பேருந்து நிலையத்திற்குள் நிரந்தர பொலிஸ் காவலரண் அமைக்கப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்தது. (ஜ-2-10-114)

## செயற்பட்டு மகிழ்வோம்

(கொடிகாமம்)

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அதிபர் திருமதி புஸ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.


இந் நிகழ்வில் தென்மராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றியத்தின் விளையாட்டு செயலாளரும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க (பிரித்தானிய கிளை) தலைவருமான ம.சிறிதாசன், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபர் க.மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## கார்-மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு!

(வெயாங்கொட)

வெயாங்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 9.40 மணியளவில் நிட்டம்புவ சாந்தமரியா பாடசாலைக்கு அருகாமையில் கட்டுநாயக்கா நோக்கிப் பயணித்த காருடன் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் 19 வயது இளைஞன் உயிரிழந்தார். இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்தார். இவர் கண்டி, வெயாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இவ் விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மட்டுவில் விபத்து; இருவர் படுகாயம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு கிரான்குளத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் கிரான்குளம் விவேகானந்தா கல்லூரிக்கு அருகில் பிக்கப் வாகனமும் ஆட்டோவும் மோதிக்கொண்டதன் காரணமாக விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தின்போது ஆட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

# என்னை சிறையிலடைக்க மீண்டும் முயற்சி

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ராஜித முறையீடு



(கொழும்பு)

நீதிமன்றில் முன்பிணை கோரிய நிலையில் அதனையும் பொருட்படுத்தாது பிடியாணையைப் பெற்று என்னைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்தமை அடிப்படை மனித உரிமை மீறலாகும். அத்துடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள என்னை மீண்டும் சிறையில் அடைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியும் அரசியல் சூழ்ச்சியாகும் என்று மனித உரிமை ஆணைக்குழுவில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன முறையிட்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவுடன் நேற்று முன்தினம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சென்ற ராஜித சேனாரத்ன எம்.பி.இந்த முறைப்பாட்டை தெரிவித்தார்.

வெள்ளை வான் கடத்தல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் தமக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பில் செய்தியாளர் மாநாட்டை நடத்திய இருவரும் அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்தே ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் தனது முறைப்பாட்டை முன்வைத்தார்.

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதித் தேர்தலின் போது வெள்ளை வான் கடத்தல் சம்பந்தமாக நடத்தப்பட்ட ஊடக சந்திப்பு தொடர்பில் தன்னை கைது செய்ய புலனாய்வுப் பிரிவினர் தயாராகிய நிலையில் தான் தனது சட்டத்தரணி மூலம் முன்பிணை மனுத் தாக்கல் செய்து நீதிமன்றம் அந்த மனுவை ஏற்றுக்கொண்டு விசாரணைக்கு திகதி குறிப்பிட்டிருக்கையில்,

பிணை வழங்கக்கூடிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றில் அழைப்பாணையைப் பெறாமல் சட்ட ரீதியற்ற முறையில் பிடியாணையைப் பெற்று தன்னை கைது செய்தமை அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

30.12.2019 ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டுள்ள நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இந்த மனுவை மீளாய்வு செய்யக்கோரி மேல் நீதிமன்றில் மீளாய்வு மனுத்தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு திகதி குறிப்பிப்பட்டுள்ள நிலையில், திட்டமிட்டு தனக்கு வழங்கப்பட்டுள்ள பிணையை இரத்து செய்வதற்கான நோக்கத்தில் முதலாம் இரண்டாம் சந்தேக நபர்களின ஊடாக பொய்யான குற்றச்சாட்டொன்றை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் பதிவு செய்து என்னை சிறையில் அடைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. இதுவும் என்னை சிறையில் அடைப்பதற்கான சூழ்ச்சியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## ரஞ்சனுக்கு மறியல்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் அவரை விளக்கமறியலில் வைக்க நுகேகொட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஜ)

## பாரதம்

# கேரள சட்டசபையில் எதிர்க்கட்சி வெளிநடப்பு



(திருவனந்தபுரம்)

கேரள சட்டசபையில் ஆளுநருக்கு எதிராக எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் கடும் அமளியில் ஈடுபட்டதுடன், ஆளுநரின் உரையை புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர்.

குடியுரிமைத் திருத்த சட்டத்தை ரத்து செய்யக்கோரி, கேரள சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், கேரள அரசு சார்பில் உச்ச நீதிமன்றம் வழக்கும் தொடரப்பட் டது. இந்த விவகாரத்தில் ஆளு நருக்கும், முதலமைச்சர் பினராயி விஜயனுக்கும் இடையே மோதல் முற்றியது.

உச்ச நீதிமன்றம் கேரள அரசு வழக்கு தொடர்ந்ததை ஆளுநர் விரும்பவில்லை. தன்னிடம் தகவல் தெரிவிக்காமல், உச்ச நீதிமன்றத்தை அணுகியது முறையற்ற செயல் என்று ஆளுநர் ஆரிப் முகமது கான் தெரிவித்திருந்தார்.

சட்டசபையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு மாநில அரசு எதிர்ப்பு தெரிவிப்பது தொடர்பான வாசகத்தை படிக்க மாட்டேன் எனவும் கூறியிருந்தார்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், கேரள சட்டசபையின் பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் ஆளுநர் உரையாற்ற வந்தார்.

அவரை சபைக்கு வர விடாமல் எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய ஜனநாயக முன்னணி ஏம்.எல்.ஏக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்றும், அவர் சட்டசபையில் இருந்து திரும்பி போக வேண்டும் என்றும் முழக்கமிட்டனர். குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும் என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். இதனால் சட்டசபையில் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் அவைக்காவலர்கள் உதவியுடன் ஆளுநரை முதல்வர் பினராயி விஜயன் பாது காப்பாக அவரது இருக்கைக்கு அழைத்து வந்தார்.

ஆளுநர் தனது உரையைத் தொடங்கியபோது தொடர்ந்து எதிர்ப்பு முழக்கமிட்ட ஐக்கிய ஜனநாயக முன்னணி எம்.எல்.ஏக்கள், வெளிநடப்பு செய்தனர். பின்னர் சட்டசபைக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஜ-2)

# சீனாவை அ
# உயிரிழ

## வுஹான் நகர

(பீஜிங்)

வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 135 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், நான்காயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வுஹான் நகரில் வைரஸ் வேகமாகப் பரவி வருகின்

# கொரோனா வைரஸினை ஒத்த வைரஸினை உருவாக்கியுள்ளதாக விஞ்ஞானிகள் அறிவிப்பு

(மெல்பேர்ன்)

கொரோனா வைரஸினை ஒத்த வைரஸினை உருவாக்கியுள்ளதாக அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

மெல்பேர்னின் பீட்டர் டொகெட்ரி நிறுவகத்தை சேர்ந்த விஞ்ஞானிகளே கொரோனா வைரஸினை ஒத்த வைரஸ்களை உருவாக்கியுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆராய்ச்சியாளர்களுடன் இந்த வைரஸினை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் பகிர்ந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குபேய் மாநிலத்தில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸின் மரபணு வரிசையை சீன விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். எனினும் தங்களுடைய முயற்சி கொரோனா வைரஸ் குறித்த பல விடயங்களை அறிந்து கொள்வதற்கு மிக முக்கியமானதாக அமையும் என பீட்டர் டொகெட்ரி நிறுவகத்தின் தலைவர் யூலியன் டுரூஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதன்போது அனைத்து சோதனை முறைகளையும் மாற்றியமைத்து சரிபார்க்கவும் அவற்றின் உணர்திறன் மற்றும் தனித்துவங்களை ஒப்பிட்டு பார்க்கவும் முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த முயற்சி காரணமாக கொரோனா வைரஸிற்கான தடுப்பு மருந்தை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை விரைவில் முன்னெடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (2)

# தொழிற்
# 11 பேர்



# குடியுரிமைத் திருத்தச்சட்டத்திற்கு எதிராக ஓவியம் வரைந்த மம்தா பானர்ஜி

(டில்லி)

குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக ஓவியம் வரைந்து மம்தா பானர்ஜி தனது எதிர்ப்பை தெரிவித்தார். பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கு வங்காள மாநில முதல்வரும் திரிணாமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி, குடியுரிமை திருத்த சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு, தேசிய மக்கள் தொகை பதிவேடு ஆகியவற்றுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். இவற்றுக்கு எதிராக 11 பேரணிகளையும், 7 பொதுக்கூட்டங்களையும் நடத்தியுள்ளார்.

இவற்றை மேற்கு வங்காளத்தில் அமுல்படுத்தமாட்டேன் என்று உறுதிபடவும் தெரிவித்தார்.

இந்நிலையில், குடியுரிமைச் சட்டத்துக்கு ஓவியம் மூலம் எதிர்ப்பு தெரிவிக்கும் நிகழ்ச்சி, நேற்று முன் தினம் கொல்கத்தாவில் மாயோ சாலையில்உள்ள மகாத்மா காந்தி சிலை அருகே நடந்தது. அதில், மம்தா பானர்ஜி கலந்து கொண்டார்.

மம்தா பானர்ஜி, நன்றாக ஓவியம் வரைபவர். எனவே, அவர் தூரிகையை கையில் ஏந்தி, குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து போராடும் ஒரு பெண்ணின் முகத்தை வரைந்தார். முகத்தில் ஆங்காங்கே, 'குடியுரிமை சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு, தேசிய மக்கள் தொகை பதிவேடு'




ஆகியவற்றை குறிக்கும் ஆங்கில எழுத்துகளை எழுதினார்.

மேலும், அந்தப் பெண்ணின் கண்ணின் கருவிழி இருக்கும் இடத்தில் 'நோ' என்ற ஆங்கில எழுத்துகளை எழுதி இருந்தார்.

அதுபோல், வேறு சில ஓவியர்களும் தங்களது எதிர்ப்பு ஓவியங்களை வரைந்தனர். மம்தா பானர்ஜி வன்ரைந்த ஓவியம், நாடு முழுவதும் ஓவியக் கூடங்களில் காட்சிக்கு வைக்கப்படும் என்று திரிணாமூல் காங்கிரஸ் தலைவர் தெரிவித்தார். ஓவியம் வரைந்த பிறகு, மம்தா பானர்ஜி கூறியதாவது,

கலைஞர்கள் பல்வேறு கலை வடிவங்கள் மூலம் குடியுரிமை சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்கள் தெரிவிக்கும் ஒரே செய்தி, "இந்தியர்களாகிய நாங்கள், வண்ணமயமான கலாசாரமும், வேற்றுமையில் ஒற்றுமையும் கொண்டவர்கள். அதை பாதுகாப்போம். நாங்கள் பிளவை விரும்பவில்லை. ஒன்றுபட்ட இந்தியாவையே விரும்புகிறோம்" என்பதுதான்.

இது, தனித்துவமான போராட்ட அடையாளம். இந்த அமைதியான போராட்டம், ஒட்டுமொத்த நாட்டுக்கும் முன்னுதாரணமாக இருக்கும்.

இந்த சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்பு, மத்திய அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி கருத்து கேட்டிருக்க வேண்டும். ஆனால் நடத்தவில்லை. இருப்பினும், பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம். ஆனால், முதலில் இந்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும். இதை அமுல்படுத்த மாட்டோம் என்று மீண்டும் கூறிக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# வெளிநாடு

## வ அச்சுறுத்தும் கொரோனா;
## ழப்பு 135 ஆக அதிகரிப்பு

### கர மேயர் பதவி விலகுவதாக அறிவிப்பு

றமை தொடர்பாக மன்னிப்புக் கோரும் வகையில் தனது பதவியினை இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்தார்.

10 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட வுஹான் பிராந்தியத்தில் இதற்கு முன்னர் இவ்வாறான நிலையைத் தான் கண்டதில்லை என ஷூ ஷியான்வாங் தெரிவித்தார். (ஜ-2)



## ஆயுத உற்பத்தியில் சீனாவுக்கு இரண்டாமிடம்

### அமெரிக்கா முதலிடத்தில்



(ஸ்டொக்ஹோம்)

உலகிலேயே அதிகளவாக ஆயுதம் உற்பத்தி செய்யப்படும் நாடுகளின் பட்டியலில் முதல் இடத்திலுள்ள அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனாவுள்ளது.

சுவீடனின் ஸ்டொக்ஹோமில் உள்ள சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) மேற்கொண்ட வருடாந்த ஆய்வு அறிக்கையிலேயே இது சுட்டிக்காட்டப்பட்டது.

அதன்படி கடந்த 2017 ஆம் ஆண்டுக்கான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு SIPRI மேற்கொண்ட ஆய்வில், ஆயுத உற்பத்தியைப் பொறுத்தவரை அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் முறையே முதல் மூன்று இடங்களையும் பிடித்துள்ளன.

2017 ஆம் ஆண்டில் அமெரிக்கா சுமார் 226.6 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது. சீனா 70 - 80 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது. ரஷ்யா சுமார் 37.7 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ற்சாலையில் தீப்பரவல்;
## ர் உடல் கருகிப் பலி



(லாகூர்)

பாகிஸ்தானில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் அங்கு பணியில் இருந்த 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பாகிஸ்தான் நாட்டின் லாகூர் மாகாணத்தில் ஷாதரா என்ற பகுதியில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை அமைந்துள்ளது.

இந்நிலையில், இந்தத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் வழக்கம்போல பணியாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். அப்போது திரவியம் தயாரிப்பிற்காக வைக்கப்பட்டிருந்த காஸ் சிலிண்டர் திடீரென வெடித்தது.

இதனால் இரசாயனத் திரவியங்கள் வைக்கப்பட்டிருந்த பகுதியில் பற்றியெரிந்த தீ தொழிற்சாலை முழுவதும் வேகமாகப் பரவியது. இந்தத் தீ விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்து, மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் சிக்கிய 2 பேரை உயிருடன் மீட்டனர். ஆனால் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த பெண்கள் உட்பட 11 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். (ஜ-2)

## அமெ.விமானத்தை சுட்டு வீழ்த்தினோம்

### தலிபான்கள் அறிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க போர் விமானத்தை நாங்கள் தான் சுட்டு வீழ்த்தினோம் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் தலிபான் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியில் விமானம் ஒன்று நொறுங்கி விழுந்தது.

ஆப்கானிஸ்தான் நாட்டின் காஜினி மாகாணத்தின் தேயாக் பகுதியில் அமெரிக்க இராணுவத்தின் கண்காணிப்பு விமானம் கடந்த திங்கட்கிழமை நொறுங்கி விழுந்தது.

விமானம் நொறுங்கி கிடந்த இடம் தலிபான் பயங்கரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். இந்த விமானத்தில் அமெரிக்க உளவுப் படையை சேர்ந்த முக்கிய அதிகாரிகள் இருந்தனர். இந்நிலையில் தலிபான்கள் இராணுவ விமானத்தை தாங்கள் சுட்டு வீழ்த்தியதாக அறிவித்தனர். (ஜ-2)

## மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் டொனால்ட் ட்ரம்பால் முன்மொழிவு

### பலஸ்தீனிய ஜனாதிபதி நிராகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தினை முன்மொழிந்தார்.

வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே ட்ரம்ப் இந்தத் திட்டத்தினை முன்மொழிந்தார்.

இஸ்ரேலின் தனிப்பட்ட தலைநகராக ஜெருசலேமை பேணும் யோசனையுடனான மத்திய கிழக்கு சமாதான திட்டத்தையே ட்ரம்ப் இதன்போது முன்மொழிந்தார்.

இஸ்ரேலின் இறையாண்மையைப் பறைசாற்றும் வகையில் மேற்குக் கரை குடியேற்றங்களுக்கு மேலதிகமாக சுதந்திரமான பலஸ்தீனிய மாநிலமொன்றை ட்ரம்ப் முன்மொழிந்தார்.

தமது முன்மொழிவு பலஸ்தீனியர்களுக்கு இறுதி வாய்ப்பாக அமையக்கூடும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்தத் திட்ட முன்மொழிவு சதி ஆலோசனை எனத் தெரிவித்து பலஸ்தீனிய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அதனை நிராகரித்தார்.

ஜெருசலேம் மற்றும் தமது உரிமைகள் விற்பனைக்கு அல்லவெனவும், பேரம்பேசி இதில் எதனையும் பெறமுடியாது எனவும் இதுபோன்ற சதி ஆலோசனைகள் வெற்றிபெறாது எனவும் ட்ரம்ப் மற்றும் நெதன்யாஹூவிற்கு கூறிக்கொள்வதாக அவர் தெரிவித்தார். (ஜ-2)



# இலங்கையில் மிருகங்களால் கொரோனா பரவ வாய்ப்பில்லை

(கொழும்பு)

கொரோனா ஆட்கொல்லி வைரஸ் சீனாவில் மிருகங்களில் இருந்தே ஆரம்பத்தில் பரவியிருந்தது. அதன் பின்னர் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியது.

எனினும் தற்போது இலங்கையில் மிருகங்களிலிருந்து இந்த வைரஸ் பரவுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என மத்திய மாகாண மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் ஆர்.எம்.கே.பீ. ராஜநாயக்க தெரிவித்தார்.

சீனாவில் இந்த வைரஸ் தொற்று ஆரம்பத்தில் ஏற்பட்டிருப்பது வௌவால் மற்றும் பாம்பினால் என அறிவிக்கப்பட்ட நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இறுதிப்போரை நினைவுபடுத்திய மகிந்த

## இலங்கை-பாக்.பரஸ்பரம் நன்றி தெரிவிப்பு



(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் சபார் மஹ்முத் அப்பாஸி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்த அவர் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் மகிந்தவைச் சந்தித்தார்.

இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான படை ஒத்துழைப்பு தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்நிலையில் இறுதிப்போரின்போது பாகிஸ்தான் இலங்கைக்கு உதவியமை குறித்து பிரதமர் நினைவுபடுத்தினார்.



பாகிஸ்தானின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைக் கிரிக்கெட் அணி கடந்த டிசெம்பரில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தமைக்கு கடற்படைத்தளபதி நன்றி தெரிவித்தார். 2009 ஆம் ஆண்டு இலங்கைக் கிரிக்கெட் அணியின் மீது லாகூரில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர் அதே அணி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து தமது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ததாகப் பாகிஸ்தான் கடற்படைத்தளபதி தெரிவித்தார்.(இ-7)

# கொக்கட்டிச்சோலை படுகொலை 33 ஆவது ஆண்டு நினைவேந்தல்





(மகிழங்கேணி)

கொக்கட்டிச்சோலை படுகொலையின் 33 ஆவது ஆண்டு நினைவேந்தல் மகிழடித்தீவு சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் நேற்று முன்தினம் மாலை உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் பா.அரியநேத்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

1987 ஆம் ஆண்டு முதலைக்குடா இறால் வளர்ப்புப் பண்ணையில்வேலை செய்த முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித்தீவு, பண்டாரியாவெளி, படையாண்டவெளி, கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு, அம்பிளாந்துறை, கற்சேனை, பட்டிப்பளை, தாந்தாமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது நினைவுத்தூபி முன்பாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிரம்மம்

பிரம்மத்தை அறிந்தவன் பிரமம் ஆகிறான் என்று ஒரு பெரியவர் பேசினார். ஒரு கோயிலிலே தைத்திரீய உபநிஷத்து அப்படிச் சொல்லுதாம். இதைக் கேட்கும் போது நமக்கு ஒரு சந்தேகம் வரும். அது எப்படி?

பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான் என்றால் சிங்கத்தை அறிந்தவன் சிங்கம் ஆகிறானா? இப்படிப்பட்ட சந்தேகம் நமக்கு வருகிறதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இது இயற்கை. இதற்கும் அந்தப் பெரியவரே பதில் சொல்கிறார். சிங்கம் வேறு. நாங்கள் வேறு. அதனாலே சிங்கத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான் என்பது அவனுடைய விளக்கம். மனிதன் தான் பிரம்மம் என்பது தெரியாததனாலேதான் அதை வேறு எங்கேயோ எல்லாம் தேடிக் கொண்டிருக்கிறான்! கடைசியிலே அதுதான் என்பதைப் புரிந்து கொள்கிறபோது அவன் பிரம்மம் ஆகிவிடுகிறான்.

இதை விளக்குவதற்கு ஒரு உபநிஷத்துக் கதையே இருக்கிறது. நமக்கத் தெரிந்த கதைதான். ஆனால் அந்த வேறு அர்த்தத்திலே விளையாட்டாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு சமயம் ஒரு பத்து நண்பர்கள் ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். குறுக்கே ஒரு நதி. அதைக் கடந்து அடுத்த பக்கம் போகவேண்டும். எல்லோரும் ஒரு வழியாக அதைக் கடந்து கரைக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அங்கே போய்ச் சேர்ந்ததற்குப் பின்பு எல்லோரும் பத்திரமாகப் போய்ச் சேர்ந்துவிட்டோம் என்பதை தெரிந்து கொள்வதற்காக எண்ணிப் பார்க்கிறான் அந்தக் சவட்டத் தலைவன்.

அவர்கள் மொத்தம் பத்துப் பேர். ஆனால் இவன் எண்ணிப் பார்க்கிற போது ஒன்பதுதான் வருகிறது. ஏனென்றால் அவன் தன்னை விட்டுவிட்டான். எதிரிலே நிற்கிறவர்களை மட்டும் எண்ணுகிறான். ஐயையோ பத்தாவது ஆள் எங்கே என்று பதறுகிறான்.

சரி நீ இரு, நான் எண்ணுகிறேன் என்று இன்னொருவன் வந்து எண்ணுகிறான். அவனும் தன்னை விட்டுவிட்டு எண்ணுகிறான். ஒன்பது தான் வருகிறது. எல்லோரும் குய்யோ முய்யோ என்று கத்த ஆரம்பித்து விட்டார்கள். அந்தச் சமயத்திலே ஒரு பெரியவர் அந்தப் பக்கமாக வருகிறார். என்ன விடயம் என்று விசாரிக்கிறார். பத்தாவது ஆளை ஆறு அடித்துக் கொண்டு போய்விட்டது என்று சொல்லி இவர்கள் அழுகிறார்கள். சரி அழாதீர்கள் என்று சொல்லி அந்தத் தலைவனைப் பார்த்து இப்படி வா என்றதும் வருகிறான். இப்பொழுது எனக்கு முன்னால் இன்னொருதரம் எண்ணு பார்க்கலாம் என்கிறார். ஒன்று இரண்டிலே ஆரம்பித்து ஒன்பதிலே வந்து முடிக்கிறான். உடனே அந்தப் பெரியவர் நீ தான் அந்தப் பத்தாவது ஆள் என்கிறார் இது உண்மை ஆமாம்.

நாம் தான் அது. நாம் தான் நம்மளை எங்கேயோ தேடிக்கொண்டிருக்கிறோம்.

நாம் எங்கேயோ தேடிக் கொண்டிருக்கிறோமே அந்தப் பிரம்மம் நாங்கள்தான். இப்படி ஒரு பெரிய கதையை விளக்கிறதுக்காகத் தான் அப்படி ஒரு கதை சொல்லப்பட்டது. ஆனால் அதை நாம் வேறு விதமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எப்படித் தெரியுமா?

ஒரு ஆற்றங்கரையிலே ஒரு பத்துப் பேர் முழித்துக் கொண்டே நின்று கொண்டிருந்தார்களாம். அந்தப் பக்கமாக வந்த ஒருவன் ஏன் இப்படி முழித்துக் கொண்டு நிற்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறான்.

எங்களுக்கு நீச்சல் தெரியாது. நாங்கள் எல்லோரும் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தவுடனே ஆளுக்கு ஒரு ரூபா வீதம் மொத்தமாகப் பத்து ரூபா கொடுக்க வேண்டும் என்றான்., ச்ரி என்று ஒத்துக் கொண்டார்கள். இவன் ஒவ்வொருவராகக் கையைப் பிடித்து.மெதுவாக ஆற்றிலே இறக்கி அழைத்துக் கொண்டு போனான்.

ஒன்பது பேரைக் கரை சேர்த்துவிட்டான். பத்தாவது ஆள் பாதி ஆற்றிலே போய்க் கொண்டு இருக்கிறபோது... திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. பிடி நழுவி போய்விட்டது... கையை விட்டுவிட்டான்... வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. அழைத்துக் கொண்டு வந்தவன். நீச்சலடித்து தட்டுத் தடுமாறிக் கரைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

கரையிலே இருக்கிறவர்களுக்கு இந்த விடயம் தெரியாது. இருந்தாலும் இவன் உடம்பு பூராகவும் நனைந்து கொஞ்சம் அதிகமாகவே மூச்சு வாங்க நின்று கொண்டிருந்தானா? ஏங்க ஏன் இப்படி மூச்சு வாங்குகிறது. என்ன விடயம் என்று கேட்டார்களாம். அதுக்கு அவன் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் வேறு ஒன்றுமில்லை. நீங்கள் கொடுக்க வேண்டிய பத்து ரூபாயில் ஒரு ரூபாய் குறைந்து விட்டது அவ்வளவுதான் அப்படி என்றார்களாம்.

# நடேசலிங்கம் - பிரியா தம்பதிகளின் மகளுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் பாடசாலை செல்ல அனுமதி

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் நாடு கடத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள நடேசலிங்கம் - பிரியா குடும்பம் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், குறித்த தம்பதியினரின் மூத்த மகள் கோபிகா, ஆயுதமேந்திய பொலிஸ் பாதுகாப்புடன் பாலர் பாடசாலைக்கு செல்லவுள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

கடந்த 2012ஆம் ஆண்டு படகு வழியாக இலங்கையிலிருந்து வெளியேறி அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்த நடேசலிங்கமும், 2013ஆம் ஆண்டு தஞ்சமடைந்திருந்த பிரியாவும் அவுஸ்திரேலியாவில் சந்தித்த பின் திருமணம் செய்து கொண்டனர்.

தஞ்சக்கோரிக்கையாளர்களான அவர்களுக்கு அவுஸ்திரேலியாவிலேயே இரு பெண் குழந்தைகள் (கோபிகா, தருணிகா) பிறந்தன.

அவுஸ்திரேலியாவின் பிலோயலா **(Biloela)** நகரில் வசித்து வந்த இவர்களின் விசா, கடந்த மார்ச் 2018இல் காலாவதியாகியதாக தெரிவித்து, கைது செய்யப்பட்டு மெல்பேர்ன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டனர்.

இதனையடுத்து, அவர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்பட இருந்த நிலையில் அம்முயற்சி கடைசி நிமிட நீதிமன்ற தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.

பின்னர், அவர்களை கிறிஸ்துமஸ் தீவுக்கு கொண்டு சென்றது அவுஸ்திரேலிய அரசு.

இந் நிலையில் The Gladstone Observer பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ள அவர்களுடைய குடும்ப நண்பர் ஏஞ்சலா பிரடெரிக்ஸ், திங்கட்கிழமையிலிருந்து பாடசாலை ஆரம்பிக்கின்றது.

இதனால் கோபிகா மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பதாக கூறியுள்ளார். சிறுமி பாலர் பாடசாலைக்கு செல்லும்போது, அவருக்கு ஆயுதமேந்திய காவலர்களால் சூழப்பட்ட பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது எனவும் தெரிவித்தார். (ஜ-2)

# கொரோனா வைரஸை தொடர்ந்து இலங்கை குறித்த பயண ஆலோசனைகளை மாற்றியது பிரித்தானியா!

(பீஜிங்)

சீனாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவிவரும் நிலையில் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் அலுவலகம் இலங்கை குறித்த தனது பயண ஆலோசனையை புதுப்பித்துள்ளது.

இலங்கையில் ஒரு நோயாளிக்கு கொரோனா வைரஸ் தாக்கம் இருப்பது இனம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளதையும் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் அலுவலகம் சுட்டிக்காட்டியது.

இந்த வைரஸ் சீனாவின் வுஹான் நகரம், ஹூபே மாகாணத்தில் பரவியிருந்தாலும் சீனாவில் இருந்து பிற நாடுகளுக்கும் குறிப்பாக 17 நாடுகளுக்கு நோய்த் தொற்று பரவியது.

இந்நிலையில் வைரஸ் பரவாமல் தடுக்க இலங்கை அரசாங்கம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

அந்தவகையில் 24 மணித்தியால ஹொட்லைன் சேவை மற்றும் இலங்கையின் விமான நிலைய வளாகத்தில் பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# குட்டியப்புலம் பாடசாலை மாணவர்களின் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை



(குப்பிழான்)

யாழ். வலி.வடக்கு குட்டியப்புலம் பாடசாலையில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த அதிகளவான மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் மாணவர்களின் காலை நேர உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாதாந்தம் 30 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம் முன்வைத்துள்ளார்.

குறித்த பாடசாலையில் காலை உணவைப் பெற்றுக்கொள்வதில் வசதியின்மையால் மாணவர்கள் காலை உணவு உட்கொள்ளாது பாடசாலைக்கு வருகை தருவதால் பாடசாலையில் மயக்கமுற்று விழும் நிலை காணப்படுவதாகப் பாடசாலையின் அதிபர் சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதத்திடம் தெரியப்படுத்தினார்.

இதனால், மாணவர்களின் நலத்தினை கருத்திற்கொண்டு அவர்களுக்குத் தினமும் காலை உணவினை வழங்குவதற்கு ஏதுவாக மாதாந்தம் 30 ஆயிரம் ரூபாவை வழங்கி வைப்பதாக கணேஸ்வரன் வேலாயுதம் உறுதியளித்திருந்தார்.

இதற்கமைய நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை மாணவர்களுக்கான முதல் மாதத் தொகையை பெற்றோர் சந்திப்பு மேற்கொண்டு அவர்கள் முன்னிலையில் குறித்த நிதி அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டது. (ஜ-5-18)

# இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கைக் கடற்படையினர் உதவி

(யாழ்ப்பாணம்)

மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது நிர்க்கதிக்குள்ளான இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கைக் கடற்படையினர் உதவினர். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வடக்கின் அனலைதீவு கடற்பகுதியில் இழுவைப்படகு ஒன்றை அவதானித்த கடற்படையினர் அதனை சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது குறித்த படகு இயந்திர பழுது காரணமாகவே அங்கு தரித்திருந்தது.

இதனையடுத்து குறித்த இழுவைப்படகில் இருந்து கடற்றொழிலாளர்களை வேறு ஒரு இந்திய இழுவைப்படகில் அனுப்பிவைக்க இலங்கை கடற்படையினர் உதவிசெய்தனர். (ஜ)

# முகக் கவசங்கள் இறக்குமதி

(கொழும்பு)

முகக்கவசங்களை துரிதமாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், முகக்கவசங்களின் உற்பத்தியையும் துரிதப்படுத்துமாறு உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் குறித்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது

இதேவேளை, முகக்கவச விற்பனை சந்தையில் தற்போது மாபியாவாக மாறியுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், முகக்கவ சங்களை அணியுமாறு பொது மக்களுக்கு இதுவரையில் அறி விக்கப்படவில்லை.

எனவே, தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-2)

# செய்தித்துளிகள்

## பேருந்து-மோட்டார் சைக்கிள் விபத்து; 19 வயது இளைஞன் பரிதாபமாகப் பலி!

(வெல்லவாய)

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்லவாய நகர பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் கடந்த 27 ஆம் திகதி இரவு 8.45 மணியளவில் விகாரை திசையிலிருந்து எல்ல சந்தியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த இ.போ.ச. பேருந்தில் மோதியதில் மோட்டார் சைக்கிள் சாரதியின் உடலின் மேல் பேருந்தின் முன் டயர் ஏறி விபத்து இடம் பெற்றது.

இவ் விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். இவர் 19 வயதுடைய யாலபோவ, வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இவ் விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மாதம்பேயில் விபத்து வியாபாரி உயிரிழப்பு!

(மாதம்பே)

சிலாபம்-கொழும்பு பிரதான வீதியில் மாதம்பே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பல பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில், ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

வான் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டதில் இந்த அசம்பாவிதம் நேர்ந்தது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய 64 வயதுடைய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மாதம்பே-கல்கமுவ பகுதியைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

## மேலும் 93 மாணவர்கள் நாடுதிரும்பினர்

(கொழும்பு)

சீனாவிற்கு உயர் கல்வி கற்பதற்காக சென்றிருந்த இலங்கை மாணவர்களை சீனாவிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்று அனுப்பி வைத்ததாக இலங்கைக்கான சீனத் தூதர் தெரிவித்தார்.

சீனாவில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாகச் சீனாவிலிருந்து 93 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

அதன்படி இதுவரையில் மொத்தமாக 380 இலங்கை மாண வர்கள் சீனாவிலிருந்து வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 110 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 320 | 280 | 300 | 250 | 300 |
| தக்காளி | 450 | 550 | 370 | 300 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 140 | 160 | 150 | 130 | 160 |
| கரட் | 320 | 450 | 400 | 300 | 500 |
| பூசணி | 140 | 100 | 120 | 100 | 160 |
| புடோல் | 140 | 140 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 90, | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300-500 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 150 | 100 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 230 | 220 | 150 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 90 | 120 |
| பயற்றங்காய் | 250 | 240 | 270 | 250 | 240 |
| லீக்ஸ் | 300 | 300 | 270 | 300 | 300 |
| பீற்றூட் | 160 | 160 | 340 | 200 | 160 |
| கறிமிளகாய் | 300 | 200 | 280 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 700 | 1400 | 800 | 600 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 250 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 70 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30-50 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 30 | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30-70 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 140 | 180 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 250 | 250 | 300 |
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 30 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | — | — | 120 | 120 |

# சஜித்தை கட்சித் தலைவராக நியமிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை



## ரவி கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவை கட்சித் தலைவராக நியமிப்பதற்கான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என அக்கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதையே கட்சியில் உள்ள அனைத்து



சிரேஷ்ட உறுப்பினர்களும் விரும்புவதாகக் கூறினார்.

மேலும் மத்திய வங்கி மோசடி விவகாரம் குறித்தும், இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்றும் சில உறுப்பினர்கள் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிட்டமையாலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததாக குறிப்பிட்டார்.

அத்தோடு இவ்வாறான அறிக்கைகளை முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, கபீர் ஹாசீம் மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகியோரே வெளியிட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை ஒரு பௌத்த நாடு என ஒரு சிலர் கூறினாலும், அனைத்து மதங்களையும் சமூகங்களையும் மதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் தான் ஈடுபடவில்லை என்பதை மோசடி தொடர்பான தடயவியல் அறிக்கை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டதாகவும் தெரிவித்தார். (ஐ)

## சஹ்ரானுடன் தொடர்பு கொண்டிருந்த சந்தேக நபரின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

சஹ்ரான் ஹாசீமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

குறித்த வழக்கு நேற்று கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபரை மீண்டும் எதிர்வரும் மே 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

விசாரணையின் போது மேலதிக அறிக்கைகள் பொலிஸாரால் நேற்று தாக்கல் செய்யப்பட்டு சந்தேகநபர் விசாரணைக்காக மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வைத்துக்கடந்த வருடம் கைதான குறித்த சந்தேக நபர் அண்மையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இருந்த போதிலும் தற்போது மீண்டும் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு கல்முனை நீதிமன்றத்திற்கு அதிகளவான பாதுகாப்பு வழங்கப்பட்டு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவரான சஹ்ரான் ஹாசீம் தலைமையில் பல்வேறு இடங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 26 அன்று அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பின்னர் குறித்த அமைப்புடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நாட்டின் நாலாபுறமும் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எதிர்வரும் தேர்தலில் கைதிகளுக்கும் வாக்குரிமை

(கொழும்பு)

சிறையில் உள்ள கைதிகளுக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை வழங்குமாறு தேர்தல் கண்காணிப்பாளர்கள் கோரினர்.

சுதந்திர மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான அமைப்பான கபே மற்றும் மனித உரிமைகள் மத்திய நிலையம் ஆகியன இந்த கோரிக்கையினை எழுத்து மூலமான கடிதத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ளன.

ஒருவர் சிறையில் இருப்பதால் அவருக்குள்ள வாக்களிக்கும் உரிமையை பறிக்க முடியாது என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலகில் உள்ள பல நாடுகளில், கைதிகளுக்கும் தேர்தலில் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்ற முறையை இலங்கையிலும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

மேலும் தற்போது இலங்கையில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறைக்கைதிகள் உள்ளனர் என்றும் அவர்களில் பலருக்கு வாக்குரிமை உள்ளதாகவும் குறித்த இரு அமைப்புக்களும் சுட்டிக்காட்டின. (ஐ)

## மணல் மேடொன்றிலிருந்து மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மகாவலி கங்கையின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹெபரவ ஶ்ரீலங்கா நிப்போன் நட்பு பாலத்தின் கீழ் மணல் மேடொன்றில் இருந்து மனித எச்சங்கள் சில கண்டுபிடிக்கப பட்டன.

குறித்த மனித எச்சங்கள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனம் ஒன்றின் ஆய்வு கூடத்தில் பரிசோதனைக்காக பயன்படுத்தப்பட்ட பின்னர் அகற்றப்பட்ட மனித எச்சங்கள் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

ஶ்ரீலங்கா நிப்போன் நட்பு பாலத்தின் தூண்களின் கீழ் பகுதி இத்தினங்களில் புதுப்பிக்கப்படுவதால் அப்பகுதியில் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு மணல் மேடொன்றில் இருந்து இந்த மனித எச்சங்கள் கிடைக்கப்பெற்றன.



அதனைத் தொடர்ந்து அது தொடர்பில் குறித்த பணியாளர்கள் கிராந்துருகோட்டை பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அதன்படி, பொலிஸ் குற்றவியல் பிரிவினரால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இதன் போது குறித்த மனித எச்சங்கள் கம்பிகளால் கட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், குறித்த மனித எச்சங்களை மஹியங்கனை சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கிராந்துருகோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கொரோனா வைரஸ் காரணமாக பாடசாலைகள் மூடப்படாது

### பந்துல தெரிவிப்பு



(கொழும்பு)

கொரோனா வைரஸின் காரணமாக பாடசாலைகள் மூடப்படமாட்டாது.

இது தொடர்பில் எந்தவித தீர்மானமும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை என்றும் உயர் கல்வி அமைச்சரும், பதில் கல்வி அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை நிறுத்துவதற்கும் கல்வியமைச்சு தீர்மானிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

சீனாவில் பரவிவரும் புதிய கொரோனா வைரஸ் குறித்து சமூக ஊடகங்களில் வெளிவரும் உண்மைக்குப் புறம்பான மற்றும் போலியான விடயங்களில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயத்தை தெரிவித்தார். (ஐ)

## கடந்த ஒரு வாரத்தில் 201 பேருக்கு டெங்கு

### ஒருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி தொடக்கம் 2020 ஜனவரி 24 ஆம் திகதி வரையும் 201 பேர் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு பொறுப்பான வைத்திய கலாநிதி வே. குணராஜசேகரம் தெரிவித்தார்.

இந்த வாரம் டெங்கு தாக்கத்தால் அதிகமாக பாதிப்புக்குள்ளான மட்டக்களப்புப் பிரிவில் இதுவரை 38 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஆரையம்பதி 35 பேர், களுவாஞ்சிக்குடி 21 பேர், வாழைச்சேனை 16 பேர், செங்கலடி 22 பேர், காத்தான்குடி 14 பேர், ஏறாவூர் 5 பேர், வெல்லாவெளி 4 பேர், வவுணதீவு 6 பேர், பட்டிப்பளை 6 பேர், ஓட்டமாவடி 10 பேர், கோரளைப்பற்று மத்தி 18 பேர், கிரான் 6 பேர் என டெங்கு தொற்று நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் ஒரு மரணம் பதிவாகியுள்ளதாகவும் மொத்தமாக கடந்த வாரம் 201 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குத் தொற்றுக்கு ஆளாகி சிகிச்சை பெற்று வீடு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொரோனா வைரஸ் குறித்து அறிக்கையிடும்போது ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்



## பிரதமர் மகிந்த அறிவுரை

**(கொழும்பு)**

**இலங்கையில் கொரோனா வைரஸிலிருந்து ஏற்படக் கூடிய பாதிப்புக்களையும் சவால்களையும் சவால்களை எதிர்கொள்வதில் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தயார்நிலை குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது திருப்தியை வெளியிட்டுள்ளார். இது தொடர்புடைய முன்னேற்றங்கள் குறித்து அறிக்கையிடுவதில் சமூக ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.**

தற்போதைய நிலைமையை நிர்வகிப்பதற்கான அனைத்து அம்சங்கள் தொடர்பான தெளிவான வழிகாட்டுதல்கள் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சால் நாடு முழுவதிலுமுள்ள சுகாதார அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், சுகாதாரம், கல்வி, சுற்றுலா, வெளிவிவகாரங்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு, தபால் சேவை, மீன்வளம், இடர் முகாமைத்துவம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது பிரதமர் இந்த அவதானிப்பை மேற்கொண்டார்.

தற்போதைய சிரமமான காலப் பகுதியிலும், நாடு திரும்ப விரும்புவோர் இலங்கைக்கு திரும்புவதற்கான பயணத்தை எளிதாக்குவதில் சீன அரசாங்கம் இலங்கையர்களுக்கு, குறிப்பாக சீனாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களுக்கு அளித்த ஆதரவை அவர் பாராட்டினார். இந்த மருத்துவ அவசர நிலைமையை புரிந்துகொண்டமைக்காக, அவர் சீன அரசாங்கத்திற்கான தனது ஆதரவையும் வெளிப்படுத்தினார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்படக்கூடிய பயணிகளை தடைகாப்புத் திரையிடுவதற்கு சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், கொழும்பு மற்றும் பிற மாகாணங்களில் சந்தேகத்திற்கு இடமான எந்தவொரு நோயாளர்களையும் கையாள்வதற்கான இலங்கை சுகாதார சேவைகளின் ஆயத்த நிலைகள் குறித்தும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி விளக்கினார். இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட ஒரேயொரு நோயாளர் மாத்திரமே கண்டறியப்பட்டுள்ளதுடன், இந்த சீன நாட்டுப் பிரஜை அங்கொடையில் உள்ள தொற்று நோய்கள் வைத்தியசாலையில் குணமடைந்து வருவதாகவும் தெளிவுறுத்தப்பட்டது.

சீன நாட்டுப் பிரஜைகளின்பயணத்திற்கு எந்தவித தடைகளும் விதிக்கப்படவில்லை. எனினும், சீனாவிலிருந்து வருபவர்கள் அனைவரும் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இணையம் வாயிலான ஒன்லைன் விசாவை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

சுகாதார அமைச்சு சர்வதேச சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப தேவையான தடைகாப்புத் திரையிடலை குடிவரவு மற்றும் விமான அதிகாரிகளுடன் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் பீஜிங்கிலுள்ள இலங்கைத் தூதரகம், ஷாங்காய் மற்றும் குவாங்சோவில் உள்ள உத்வித் தூதரக அலுவலகங்கள் ஆகியவற்றால் தற்போது மூடப்பட்ட நிலையில் உள்ள வுஹான் நகரில் உள்ள இலங்கை மாணவர்களின் நலனை எளிதாக்குவதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இந்த சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில், இலங்கை மாணவர்கள் மற்றும் வுஹான் நகரிலுள்ள 33 குடும்பங்களை திருப்பி அனுப்புவதற்கான கோரிக்கை சீன அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்படுவதற்காக நிலுவையில் உள்ளது. (ஜ)

# இலங்கை மாணவர்களின் கல்வித்திட்டம் தொடர்பான இந்தியக் கல்விக் கண்காட்சி நேற்று ஆரம்பம்







(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுப்பாலத்தை ஏற்படுத்தும் முகமாக இந்தியாவில் இலங்கை மாணவர்களுக்கான கல்வித் திட்டம் தொடர்பான இந்திய கல்வி கண்காட்சி நேற்று யாழ். வலம்புரி ஹோட்டலில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமானது.

இக் கண்காட்சியில் இந்தியாவில் இடம்பெறவுள்ள கல்வி தொடர்பாக விரிவாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதோடு இந்திய அரசு வெளிநாட்டுமாணவர்களுக்கு என்னென்ன புலமைப்பரிசில்களை வழங்குகிறது என்பதை இந்தக் கண்காட்சி ஊடாக பார்க்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இக்கண்காட்சி இன்று 30 ஆம் திகதிவரை முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நடைபெறும்.

நிகழ்வின் ஆரம்ப விழாவில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதுவர் கே. பாலச்சந்திரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள், யாழ். மாநகர முதல்வர் ஆனல்ட், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஜ-10)

# பாக். கடற்படைப்பெண்கள் சங்கத் தலைவர் வெலிசர கடற்படை முன்பள்ளிக்கு விஜயம்



(வெலிசர)

பாகிஸ்தான் கடற்படை மகளிர் அமைப்பின் தலைவரான ஷாஹீனா அப்பாஸி, வெலிசர கடற்படை முன்பள்ளி மற்றும் பகல்நேர பராமரிப்பு மையத்தை கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டார்.

பாகிஸ்தான் கடற்படை மகளிர் அமைப்பின் தலைவரான திருமதி ஷாஹீனா அப்பாசியை, இலங்கை கடற்படை சேவா வனிதா பிரிவு தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அன்புடன் வரவேற்றனர்.

வரவேற்பு விழா முடிவில் முன்பள்ளி குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளி ஊழியர்கள் திருமதி அப்பாஸிக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

மேலும், திருமதி ஷாஹினா அப்பாசியின் வருகையை குறிக்கும் வகையில் ஒரு மாமரக் கன்று இந்த வளாகத்தில் நடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கடற்படை சேவா வனிதா பிரிவு ஊழியர்கள் கலந்து கொண்டனர். (ஜ)

# நீதியைப் பெறுவதற்கு சர்வதேசம் உதவ வேண்டும்

## யோகேஸ்வரன் வலியுறுத்து



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் நீதியை நிலைநாட்டக்கூடிய அரசாங்கமல்ல, நீதியைப் பெறுவதற்கு சர்வதேசம் தான் எங்களுக்கு உதவ வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

33 ஆவது ஆண்டு கொக்கட்டிச் சோலை படுகொலை நினைவு தினம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற பல படுகொலைகளின் சூத்திரதாரிகள் நேற்று வரையில் உயிருடன்தான் உலாவி வருகின்றனர். படுகொலைகள் தொடர்பில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் அந்தப் படுகொலைகளை மேற்கொண்டவர்கள் தண்டிக்கப்படாத நிலையிலேயே உள்ளனர்.

சில படுகொலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலையாளர்களை நீதிமன்றம் ஊடாக வெளிப்படுத்தி வழக்கு முடிவுறும் தறுவாயிலும் இருந்துள்ளன. குறிப்பாக மயிலந்தனை படுகொலை பத்தொன்பது வருடங்கள் நீதிமன்றில் பேசப்பட்டது.

ஆனால் தீர்ப்பு வழங்கும் இறுதி நேரத்தில் ஜூரியின் தலையீட்டால் சந்தேக நபர்களாக இருந்த கொலையாளிகள் தப்பினார்கள். அதுமட்டுமல்ல சத்துருக்கொண்டான் படுகொலையின் படுகொலையாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். ஆராயப்பட்டது. முடிவுகூறப்பட்டது. அந்தப் படுகொலை தொடர்பான அறிக்கை ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதுவும் அன்றே கிடங்கில் போடப்பட்டு விட்டது. இவ்வாறு பல படுகொலைகள் தொடர்பில் நீதியற்ற நிலையே இந்த நாட்டில் உள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கான சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்மூலம் இவ்வாறான கொலை முயற்சிகளை செய்தவர்கள் சிலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டு, குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

ஆனால் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஜனாதிபதியாக வந்ததும் தான் இருந்த காலத்தில் தன்னோடு இருந்தவர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும்போது அவர்களை இரகசியமான முறையில் விடுதலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்.

வடகிழக்கு உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்ற பல கொலைகள், கடத்தல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் இரகசியமான முறையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அப்படியானால் தற்போதைய ஆட்சியிலே நீதி நிலைநாட்டப்படுமா? நியாயம் கிடைக்குமா? தமிழ் மக்களின் அத்தனை இழப்புகளுக்கும் ஏதாவது முடிவு கிடைக்குமா? என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

ஏனென்றால் இந்த நாடு என்றுமில்லாத வகையில் சிங்கள தேசம், ஆட்சியாளர்கள் சிங்கள மக்களால் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர் என்று உரியவர்களே அறைகூவிக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் இத்தனை படுகொலைகளுக்கும் நீதி கிடைக்கும் என்பதை எதிர்பார்க்க முடியாத காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம்.

இந்த அரசிடமிருந்து நீதியைப் பெறுவது சிரமமாக இருக்கும். ஆகையால்தான் எங்கள் மண்ணில் நடந்தேறிய படுகொலைகளுக்கு நீதியைப் பெறும் வகையில் எங்கள் மக்கள் அனைவரும் சாத்வீக ரீதியில் ஒன்றுபட வேண்டிய அவசியம் இருக்கின்றது.

33 வருடங்களின் பின் இன்று இங்கு இவ்வாறானதொரு நிகழ்வு நடைபெறுகின்றதென்றால் இந்தப் பகுதி மக்கள் எல்லோரும் திரண்டு வரவேண்டும். அவர்கள் பயப்படக் கூடாது. எங்களது உறவுகளை திட்டமிட்டு அழித்திருக்கின்றனர். ஆகவே நாங்கள் ஒன்றுபட்டு நீதிக்காக குரல் கொடுக்க வேண்டும். அது தவறல்ல.

இனிவரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வு நடக்கும்போது மக்கள் எல்லோரும் வரவேண்டும். மக்கள் தாங்களாகவே விரும்பி இந்த நிகழ்வை அனுஷ்டிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1961

### ரோஜா

நீ அவரிடம் பணத்தைப் பறித்தாயா..?
இல்லை. அவராத்தான் குடுத்தாரு! நான் கத்தியை மட்டும் தான் காட்டினேன்.



### ராஜா



அருகில் இருக்கும் வரை சிலரின் அருமையும் எளிதில் கிடைக்கும் வரை சிலரின் அன்பையும் நாம் உணர்வதேயில்லை.

### திலீபன்

திருடப் போகும் போது ஏன் உன் மனைவியையும் கூட்டிட்டுப் போனாய்..?
விக்கிற விலைவாசில இரண்டு பேரும் வேலைக்கு போனால்தான் குடும்பம் நடத்த முடியும் ஜட்ஜ் ஐயா..!



### அருண்



நீங்க எல்லாரும் நல்லா படிச்சி நம்ம நாட்டுக்கு நல்ல பேரை வாங்கித் தரனும் சரியா?
ஏன் சார், இப்போ இருக்கிற "இந்தியா" எங்கிற பேர் நல்லா இல்லையா..?

### சுரேகா



கணவன்: நெஞ்சுவலி அம்புலன்ஸ்'க்கு போன் பண்ணு
மனைவி: செல்போன் பாஸ்வேர்ட் சொல்லுங்க.
கணவன்: இல்லை நெஞ்சுவலி சரியா போயிடுச்சு..

### அஸ்வினி


பிரியமானவர்களில் இரண்டே விதம் தான் உரிமைக்காக சிலர்... தேவைக்காக சிலர்..!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுவர் அரங்கம்

## விடாமுயற்சி



ஒரு விவசாயி வளர்த்து வந்த வயதான பொதி சுமக்கும் கழுதை ஒன்று தவறி அவன் தோட்டத்தில் உள்ள வறண்ட கிணற்றில் விழுந்து விடுகிறது. உள்ளே விழுந்த கழுதை அலறிக்கொண்டே இருந்தது. அதை எப்படி கிணற்றிலிருந்து வெளியேற்றிக் காப்பாற்றுவது என்று அவன் விடிய விடிய யோசித்தும் ஒரு யோசனையும் புலப்படவில்லை.

காப்பாற்ற எடுக்கும் எந்த முயற்சியும் அந்தக் கழுதையின் விலையைவிட அதிகம் செலவு பிடிக்கக் கூடியதாக இருந்தது. அந்தக் கிணறு எப்படியும் மூடப்பட வேண்டிய ஒன்று. தவிர அது மிகவும் வயதான கழுதை என்பதால் அதை காப்பாற்றுவது வீண்வேலை என்று முடிவு செய்த அவன், கழுதையுடன் அப்படியே அந்த கிணறை மூடிவிடுவது என்று முடிவு செய்தான்.

அக்கம் பக்கத்தினரை உதவிக்குக் கூப்பிட அனைவரும் திரண்டனர். சற்று அருகில் இருந்த ஒரு மண் திட்டிலிருந்து மண்ணை மண்வெட்டியில் அள்ளிக் கொண்டு வந்து அந்தக் கிணற்றில் அனைவரும் போட ஆரம்பித்தனர். கழுதை நடப்பதை உணர்ந்து தற்போது மரண பயத்தில் அலறியது. ஆனால் அதன் அலறலை எவரும் கவனிக்கவில்லை. இவர்கள் தொடர்ந்து மண்ணை அள்ளி அள்ளிக் கொட்ட கொஞ் சம் நேரம் கழித்து அதன் அலறல் சத்தம் அடங்கிவிட்டது.

ஒரு பத்து நிமிடம் மண்ணை அள்ளிக் கொட்டியவுடன் கிணற்றுக்குள்ளே விவசாயி எட்டிப் பார்க்க, அவன் பார்த்த காட்சி அவனை வியப்பிலாழ்த்தியது. ஒவ்வொரு முறையும் மண்ணை கொட்டும்போது, கழுதை தனது உடலை ஒரு முறை உதறி விட்டு, மண்ணை கீழே தள்ளி, அந்த மண்ணின் மீதே நின்று வந்தது.

இப்படியே பல அடிகள் அது மேலே வந்திருந்தது. இவர்கள் மேலும் மேலும் மண்ணை போட போட கழுதை தனது முயற்சியை கைவிடாது, உடலை உதறி உதறி மண்ணை கீழே தள்ளி தள்ளி அதன் மீது ஏறி நின்று வந்தது.

கழுதையின் இடைவிடாத இந்த முயற்சியால் அனைவரும் வியக்கும் வண்ணம் ஒரு வழியாக கிணற்றின் விளிம்பிற்கே வந்துவிட்டது.

விளிம்பை எட்டியவுடன் மகிழ்ச்சியில் கனைத்த கழுதை ஒரே ஓட்டமாக ஓடி தோட்டத்திற்குள் சென்று மறைந்தது.


வாழ்க்கை பல சந்தர்ப்பங்களில் இப்படித் தான் நம்மை படுகுழியில் தள்ளிக் குப்பைகளையும் மண்ணையும் நம் மீது கொட்டி நம்மை சமாதி கட்ட பார்க்கும். ஆனால் நாம் தான் இந்த கழுதை போல தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டு, அவற்றை உதறித் தள்ளி மேலே வரவேண்டும்.

நம்மை நோக்கி வீசப்படும் ஒவ்வொரு கல்லையும் சாமர்த்தியமாக பிடித்து படிக்கற்களாக்கிக் கொள்ளவேண்டும், எத்தனை பெரிய குழியில் நீங்கள் விழுந்தாலும்... "இத்தோடு நம் கதை முடிந்தது" என்று கருதாமல் விடாமுயற்சி என்ற ஒன்றைக் கொண்டு நீங்கள் நிச்சயம் மேலே வரலாம்.

"நீங்கள் எதுக்குள்ளே விழுந்தால் என்ன, உங்க மேல எது விழுந்தால் என்ன?

எல்லாத்தையும் உதறிட்டு, நம்பிக்கையுடன் செயற்படுங்கள்.


## நான்கு வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்.



## பழமொழிகள்

- பெருமையும் சிறுமையும் வாயால் வரும்.
- பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
- பேராசை பெருநட்டம்.
- பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது.
- பொறுத்தார் பூமி ஆள்வார் பொங்கினார் காடாள்வார்.
- பொறி வென்றவனே அறிவின் குருவாம்.
- பொறுமை கடலினும் பெரிது.
- பொற்கலம் ஒலிக்காது, வெண்கலம் ஒலிக்கும்.
- பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும் புகழ் ஆபரணமே பெரிது.
- போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.
- போரோடு தின்கிற மாட்டுக்கு பிடுங்கிப்போட்டுக் கட்டுமா?
- போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்.
- மடியிலே கனமிருந்தால்தான் வழியிலே பயம்.
- மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
- மண்டையுள்ள வரை சளி போகாது.
- மதியார் வாசலை மிதியாதிருப்பதே உத்தமம்.
- மந்திரிக்கும் உண்டு மதிக்கேடு.
- மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
- மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
- மருந்தே யாயினும் விருந்தோடு உண்.
- மலிந்த சரக்கு கடைத்தெருவுக்கு வரும்.
- மௌனம் கலக நாசம்.
- மழைமுகம் காணாத பயிரும், தாய்முகம் காணாத பிள்ளையும்.
- மழை விட்டாலும் தூவானம் விடவில்லை.
- மனமுரண்டிற்கு மருந்தில்லை.
- மனம் உண்டானால் இடம் உண்டு.
- மனம் தடுமாறினால் மாற்றானுக்கு வலிமை.
- மாடு கிழமானாலும் பாலின் சுவை போகுமா?

## ஒட்டகச்சிவிங்கியின் தலையையும் உடலையும் சரியாகப் பொருத்துங்களேன்



# கொரோனா வைரஸ் தொடர்பில் வீணான அச்சம் வேண்டாம்

## பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அது தொடர்பில் அரசாங்கம் இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு தாம் நன்றியும் தெரிவித்தார்.

அரசாங்கம் விசேட குழுக்களை அமைத்து மக்களை தெளிவுபடுத்தும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் நாட்டு மக்கள் அநாவசியமாக பயப்படத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இம்மாநாட்டில் தொடர்ந்தும் விளக்கமளித்த பேராயர், மேற்படி அச்சுறுத்தலிலிருந்து மக்களைப் பாதுகாக்க புத்திக்கூர்மையுடன் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

பாடசாலைகளில், பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என துறைசார்ந்த பொறுப்பதிகாரிகள், பெற்றோர் மற்றும் விரிவுரையாளர்களையும் கேட்டுக் கொள்கின்றேன். அனைவரும் முகக் கவசத்தை அணிந்து கொள்ளுங்கள். பொது இடங்களில் நடத்தப்படும் நிகழ்வுகளை சில காலத்துக்காவது தவிர்த்துக் கொள்ளுங்கள். உலக சுகாதார அமைப்பு இது தொடர்பில் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

கத்தோலிக்கப் பாடசாலைகளை மூடுவதற்கான நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட வில்லை. கல்வி அமைச்சு மேற்கொள்ளும் தீர்மானத்துக்கு இணங்க நிலைமையைக் கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பேராயர் மேலும் தெரிவித்தார். (ஜ)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகத்தில் பணிப்பாளர் திருமதி கர்னி தனபாலன் தலைமையில் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது.

# சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் பரீட்சார்த்திகளுக்கு வழிகாட்டல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2020 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் அறிமுக நிகழ்வு நாளை (01.02.2020) சனிக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணியளவில் இடம்பெறும்.

இவ் வழிகாட்டல் அறிமுக நிகழ்விற்கு பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து பரீட்சார்த்திகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மேற்குறித்த பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பரீட்சை வழிகாட்டல் வகுப்பில் இலக்கணம், சாத்திரம், உரைநடை, இலக்கியம், வரலாறு ஆகிய ஐந்து பாடங்களும் இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுவோர் என இரு பிரிவாக தனித்தனியே வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

பரீட்சைகள் சித்திரை மாதம் 10,11,12 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. எனவே பரீட்சை வழிகாட்டல் அறிமுக நிகழ்விலும் வழிகாட்டல் வகுப்புக்களிலும் விண்ணப்பதாரிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-7-9)

## தேசிய வறுமை ஒழிப்பு

# ஜனாதிபதி செயலணிக்கு கலாநிதி சிவகுமார் நியமனம்

(கொழும்பு)

தேசிய வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் நியமிக்கப்பட்டார்.

யாழ்.பல்லைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் முல்லைத்தீவு, வடக்கு விவசாய அமைச்சின் உதவிப் பணிப்பாளர், வடக்கின் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்(என்ரிப்) திட்டப் பணிப்பாளர், யாழ்.பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் பீடத்தின் தலைவராகவும் தனது பொறுப்புக்களை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-350)



# தேசிய வளங்களை பிறநாட்டவருக்கு தாரைவார்ப்பது எமது அரசாங்கத்தின் கொள்கையல்ல - மகிந்த!

(கொழும்பு)

தேசிய வளங்களை பிறநாட்டவருக்கு தாரைவார்ப்பது எமது அரசாங்கத்தின் கொள்கையல்ல எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுங்கத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நிதியமைச்சர் என்ற அடிப்படையில் சுங்கத் திணைக்களத்திற்கு இதுவரையில் நான்கு முறை மாத்திரமே வருகை தந்துள்ளேன்.

சர்வதேச சுங்க தினம் ஜனவரி மாதம் 26ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

உலக சுங்க அமைப்பு 1952 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

இருப்பினும் இலங்கை சுங்கத் திணைக்களம் 210 வருட கால பழைமை வாய்ந்தது.

இலங்கையில் சுங்க சேவை 1806ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திணைக்களம் பழைமையானதுடன் தேசிய பொருளாதார முன்னேற்றத்திலும் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளது.

ஆகவே இந்தத் திணைக்களத்தினை பாதுகாப்பது எமது பிரதான எதிர்பார்ப்பாகும்.

தேசிய பொருளாதாரத்தில் 60 சதவீத பங்களிப்பினை சுங்கத் திணைக்களம் வழங்குகின்றது. இந்த நிதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

ஆகவே சுங்கத் திணைக்களத்தினர் மிகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சுங்கத் திணைக்களம் தேசிய பாதுகாப்புடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தும் போது அதில் சுங்கத் திணைக்களத்தின் ஒத்துழைப்பு பிரதானமாக காணப்படும்.



தேசிய வளங்களை பிறநாட்டவர்களுக்கு தாரைவார்ப்பது எமது அரசாங்கத்தின் கொள்கையல்ல, கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் தேசிய வளங்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக காணப்பட்டன.

இவற்றினை கருத்திற் கொண்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை முழுமையாக பாதுகாக்கப்படும்' என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# தமிழ்ச்சங்கத்தின் பாரதிவிழா

(யாழ்ப்பாணம்)

இந்தியத் துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் பாரதி விழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மூத்த கவிஞர் சோ. பத்மநாதன் தமிழ்க்கவிதையில் பாரதியின் புரட்சி என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார். கவிஞர் கலாநிதி ச. முகுந்தன் தலைமையில் கவியரங்கம், நடன ஆசிரியர் கீதாஞ்சலி சுதர்சனின் ஸ்வதிக் நாட்டியப்பள்ளி மாணவர்கள் வழங்கும் பாரதி பாடல்களிலான நாட்டிய விருந்து ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (இ-7)

பாவத்திற்கு பல கருவிகள் உண்டு. அவற்றிற்கெல்லாம் பொருத்தமான கைப்பிடி 'பொய்'. – ஷேர்மன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தலோடு மக்களை மறந்துவிடும் வியாதி

நாட்டில் என்ன நடக்கிறது என்பது கூடத் தெரியாத அளவில் நிலைமையுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது நிர்வாகத்தில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை அரச நிர்வாகப் பணிகளில் ஈடுபடுத்துவதானது, மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்துமென வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் கூறியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்துப் பிரசாரம் செய்தவர் அ.வரதராஜப்பெருமாள்.

பெறுப்புச் சொல்ல வேண்டியவர்களிடம் அதிகாரத்தைக் கொடுப்பதுதான் பொருத்தம் என்ற வாதத்தை முன்வைத்த வரதராஜப் பெருமாள் அவர்கள், இப்போது தர்க்கம் வேறு யதார்த்தம் வேறு என்பதைப் புரிந்திருப்பார் என நம்பலாம்.

புரிதலுக்கு மேற்குறித்த சம்பவம் போதாது என்றால் காலத்தின் அசைவு தகுந்த புரிதலை வழங்கும்.

எதுஎவ்வாறாயினும் சிவில் நிர்வாகத்தில் இராணுவ அதிகாரிகளை நியமிப்பது பொது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் என்பதை எவரும் கூறத் துணியாத நிலையில், அதனை வரதராஜப்பெருமாள் கூறியிருப்பதைப் பாராட்டித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் இப்போது புதியதொரு சர்ச்சை எழுந்துள்ளது.

அதாவது வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புகளான மாநகர சபை, பிரதேச மற்றும் பட்டின நகர சபைகள் பொறுப்புடன் இயங்கவில்லை என்றும் அவை பொறுப்புடன் இயங்கினால் மட்டுமே எம்மால் அவர்களுக்கு உதவ முடியும் என்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் கூறுமளவுக்கு உள்ளூராட்சி சபைகளின் வினைத்திறன் மிக மோசமாக உள்ளதென்பது உணர்தற்குரியது.

உள்ளூராட்சி சபைகளை நாம் கைப்பற்றினால் மட்டுமே அரசாங்கத்துடன் பேரம் பேச முடியும் என்று கூறியவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர்.

அவர் கூறியதைப்போல வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனதாக்கிக் கொண்டது.

எனினும் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னர் அந்த சபைகள் எங்ஙனம் இயங்குகின்றன என்பது பற்றி இரா.சம்பந்தர் கவனம் செலுத்தவில்லை என்பது நிரூபிக்கப்படக் கூடிய உண்மை.

உள்ளூராட்சி சபைகள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றனவா? அவை நடத்துகின்ற கூட்டங்கள் பயனுள்ளவையாக இருக்கின்றனவா? என்பன பற்றியெல்லாம் கட்சித் தலைமை கவனம் செலுத்த வேண்டும்.

ஆனால் உள்ளூராட்சி சபைகள் தம்பாட்டில் இயங்குவதால், சபைக்கூட்டங்களில் சண்டைகளும் அநாகரிக வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெறுவதுடன் சபையில் ஏற்படும் அமளி துமளிகளைக் கட்டுப்படுத்த பொலிஸாரை அழைக்கின்ற நிலைமைகளும் உண்டு.

ஆக, தேர்தல்களில் கொட்டி முழக்கி மக்களை தம்பக்கம் திசை திருப்புபவர்கள் வெற்றி கிடைத்த பின்பு, மக்களை மறந்துவிடுவதுதான் நம் மத்தியில் இருக்கக்கூடிய பெரு வியாதியாகும்.

## இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட

8 சந்தேக நபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தியதாக கூறப்பட்டு கைது செய்யப்பட்ட 8 சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தை பொங்கல் தினமான கடந்த 15 ஆம் திகதி அப்பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு அப்பகுதியைச் சேர்ந்த 8 இளைஞர்கள் வெவ்வேறு இடங்களில்வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை காலை பருத்தித்துறை நீதிமன்றில் குறித்த வழக்கு எடுக்கப்பட்ட போது. 8 இளைஞர்களையும் பிணையில் விடுவிக்குமாறு தனது பிணை விண்ணப்பத்தை சமர்ப்பித்து சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வாதாடினார்.

இச் சம்பவம் தொடர்பில் தொடர்புபடாதவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.இராணுவத்திற்கும் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கை பொலிஸார் இதை சோடித்த வழக்காக தாக்கல் செய்துள்ளனர்.

எனவே அவர்கள் எட்டு பேரையும் பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணி கோரினார். இதனைத் தொடர்ந்து 8 பேரும் தலா 5 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையிலும்,1லட்சம் ரூபாய் சரீர பிணையிலும் பருத்தித்துறை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதுடன் வழக்கு எதிர்வரும் ஐந்தாம் மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-3,60,114)

தமிழர்கள் கல்வியால் உலகை வென்றவர்கள்

## தமிழ் மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்றுவேன் -சுரேன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் கல்வியால் உலகையே வென்றவர்கள். அப்படிப்பட்ட தமிழ் மக்களுக்காக என் உயிர் உள்ளவரை சேவையாற்றுவேன் என வடமாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்

யாழ் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெற்ற இந்து பௌத்த கலாசாரப்பேரவையினால் நடாத்தப்பட்ட சிங்கள மொழிப்பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்விலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தின் ஆளுநராகப் பணியாற்றிய மிகக் குறுகிய காலத்தில் அதிகளவிலான மக்கள் பணியைச் செய்தவன் என்ற ரீதியில் மீண்டும் இம்மக்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சி.

மொழி மூலமாக உடைந்துபோன இரு இதயங்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டினை இந்து பௌத்த கலாசாரப்பேரவை முன்னின்று செய்து வருகின்றது

அதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் முகமாக அத்துரலிய ரத்னதேரர் பல்வேறு முயற்சிகளை முன்னின்று செய்து வரும் நிலையில் நானும் அவருடன் இணைந்து இந்து பௌத்த உறவை கட்டியெழுப்பப் பாடுபடுவேன்.

தமிழ் மக்களுக்கு ஆளுநராகப் பணியாற்றியதுடன் எனது பணி நிறைவடையவில்லை. உலகை ஆட்டுவித்துக்கொண்டிருக்கும் தமிழன் இலங்கையிலும் கல்வித்துறையில் முன்னிலையில் திகழ வேண்டும்.

இனிவரும் காலங்களில் ஆவது இழந்து போன எமது கல்விப் பாரம்பரியத்தை மீண்டும் நிலைநிறுத்த அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக சீமெந்து கூட்டுத்தாபன முன்னாள் இறக்குமதி முகாமையாளர் லயன் இ.கொர்னேலியஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) சு.சரவணபவன், கௌரவ விருந்தினராக உரும்பிராய் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் செ.குணரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.(5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

முயற்சி, முயற்சி! தோல்வி. சரி, மீண்டும் முயற்சி, முயற்சி! தோல்வியா? சரி இந்த வகை முயற்சி வெற்றி தராது எனக் கண்டுபிடித்ததில் வெற்றி பெற்றுவிட்டோம்! இப்போது மீண்டும் புது முயற்சி! -நெப்போலியன்

## தெல்லிப்பளையில் இயங்கிவந்த அலுமினிய தொழிற்சாலைக்கு சீல்

மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை அம்பனை பகுதியில் இயங்கி வந்த அலுமினிய தொழிற்சாலை ஒன்று மல்லாகம் நீதிமன்றால் மூடப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை அம்பனை பகுதியில் இந்திய அலுமினிய தொழிற்சாலையின் கிளை நிறுவனமாக குறித்த தொழிற்சாலை கடந்த 4 வருடங்களாக இயங்கி வந்துள்ளது. குறித்த தொழிற்சாலை தொடர்பாக சுகாதார துறையினருக்கு பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் சுகாதாரத்துறையினர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதனடிப்படையில் சூழல் மாசடையக்கூடிய நிலையில் இருந்தமை, கழிவு முகாமைத்துவம் சீரின்மை, சுற்றாடலுக்கு அச்சுறுத்தலாக இருந்தமை,தொழிலாளர்களுக்குரிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நலன் பேணப்படாமை, மின்சார அபாயம் ஏற்படக்கூடிய வகையில் செயற்பாடுகள் இருந்தமை, சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் எடுக்கப்படாமை, வியாபார அனுமதிப்பத்திரம் எடுக்காமை, போன்ற காரணங்களை முன்னிறுத்தி தெல்லிப்பளை பொது சுகாதார பரிசோதகர் இராஜமோகனால் கடந்த நவம்பர் மாதம் மல்லாகம் நீதிமன்றில் இந்த தொழிற்சாலைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு இடம்பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் நீதிமன்றில் குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த தொழிற்சாலையில் குறைபாடுகள் சீர்செய்யப்படாத காரணத்தால் சுகாதார நிலைமைகள் சீர் செய்யப்படும் வரை தற்காலிகமாக மூடுமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஆனந்தராசா உத்தரவிட்டுள்ளார்.

பதிவாளர், பொதுச்சுகாதார பரிசோதகர் அடங்கிய குழுவினர் குறித்த தொழிற்சாலைக்கு சென்று குறித்த நீதிமன்ற கட்டளையை தொழிற்சாலையில் காட்சிப் படுத்தியதுடன் தொழிற்சாலையை மூடியுள்ளனர். (ம-3,9)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 31ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் கலாநிதி எஸ்.கே.எழில் வேந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜாவும் கலந்து கொள்வர். (ம-3)

## திருமுறை பண்ணிசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் நிதிப் பங்களிப்புடன் மாவை ஆதீனம் ஏற்பாடு செய்துள்ள தமிழ்நாடு (இந்தியா) பண்ணிசைக் கலைஞர்கள் வழங்கும் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் காலை 9 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் நடைபெறும். (ஐ-5)

## சத்திய தரிசனம்

### நல்ல எண்ணம் வேண்டும்



❖ கடவுள் எல்லையற்ற கருணைக் கடலாக இருக்கிறார். எல்லா உயிர்களிலும், பொருட்களிலும் அவர் நிலைபெற்று இருக்கிறார். அவரை அறிந்து கொள்ள எளிய வழி பக்தி ஒன்றே.

❖ பொறியில் சிக்கும் எலி போல, மனிதன் உலகம் என்னும் பொறியில் ஆசை வயப்பட்டு அழிந்து போகிறான்.

❖ மனிதனைத் தாக்கும் ஆயுதம் நாக்கு. நாக்கினால் உண்டான காயம் ஆற நீண்டகாலம் ஆகும். பிறர் மனதை புண்படுத்தும் விதத்தில் பேசக்கூடாது.

❖ பாம்பின் விஷம் நச்சுப்பல்லில் மட்டும் இருக்கிறது. ஆனால், மனித இதயத்தில் தீய எண்ணம் புகுந்து விட்டால் நம் உடல் முழுவதும் நஞ்சு பரவி விடும். எனவே நல்ல எண்ணங்களுடன் வாழுங்கள்.

❖ ஐம்புலன்களின் வாயிலாகவே உலகத்தோடு தொடர்பு கொள்கிறோம். இவற்றை முறையாக பயன்படுத்தாவிட்டால், அவற்றிற்கு அடிமையாவோம்.

❖ தவறு செய்யாத மனிதர் இல்லை. ஆனால், அறிந்தோ அறியாமலோ பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமை மறக்கும் அளவிற்கு தவறு செய்து விடாதீர்கள்.

# வடமாகாண குத்துச் சண்டை வீரர்கள் இலங்கைக்கு ஏழு பதக்கங்களை பெற்றுக்கொடுத்துள்ளனர்



இலங்கையை பிரதிபலித்து பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச கிக் பொக்சிங் குத்துச்சண்டை போட்டியில் வவுனியாவை சேர்ந்த ஏழு வீரர்கள் கலந்து கொண்டு ஏழு புதக்கங்களை இலங்கைக்கு பெற்றுக்கொடுத்துள்ளனர்.

பாகிஸ்தான் லாகூரில் அமைந்துள்ள கடாபி விளையாட்டு மைதானத்தின் உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடைபெற்ற சர்வதேச கிக் பொக்சிங் குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஏழு குத்துச் சண்டை வீரர்கள் இலங்கைக்கு நான்கு தங்கப்பதக்கங்களையும் மூன்று வெள்ளி பதக்கங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண கிக் பொக்சிங் குத்துச்சண்டைட் பயிற்றுவிப்பாளரும் வடக்கு மாகாண ஏழாம் அறிவு தற்காப்பு கலை சங்கத்தின் தலைவருமான எஸ். நந்தகுமாரினால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களான, வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சஞ்சயன், பி.ராகுல் ஆகியோர் தங்கப் பதக்கத்தையும் ரி.நாகராஜா வெள்ளிப்பதக்கத்தையும் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஆர்.கெ. கெவின் தங்கப்பதக்கத்தையும் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவன் கெ.நிரோஜன் தங்கப் பதக்கத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த வி.வசீகரன் வெள்ளி பதக்கத்தையும் வவுனியா காமினி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். சிறிதர்சன் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

சர்வதேச குத்துச்சண்டை பயிற்சிவிப்பாளரும் பிரான்ஸ் சவாட் குத்துச்சண்டை அமைப்பின் தலைவருமான சி.பூ.பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கையில் இருந்து வடமாகாணத்தின் வவுனியாவை சேர்ந்த ஏழு வீரர்களும் தென்னிலங்கையைச் சேர்ந்த பதின்னான்கு வீரர்களுமாக 21 வீரர்கள் இலங்கையை பிரதிபலித்து பாகிஸ்தானுக்கு பயணமாகியிருந்தனர். இவ்வீரர்கள் இலங்கைக்கு 11 தங்கப்பதக்கங்களையும் 8 வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இதன்போது தெற்காசிய T+R கூட்டமைப்பின் தலைவரும் பாகிஸ்தானின் ஒருங்கிணைப்பாளருமான மாலிக் இப்திகார் உள்ளிட்ட குழுவினரின் தலைமையில் பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச் சண்டையில் வெற்றி வாகை சூடிய வீரர்கள் கடந்த 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (க-299-250)

## சர்வதேச குத்துச் சண்டை போட்டியில் இரண்டு வவுனியா வீரர்கள் காயம்

பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச கிக் பொக்சிங் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொண்ட இரண்டு இலங்கை வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இலங்கையை பிரதிபலித்து வடக்கு மாகாணம் வவுனியாவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ரி.நாகராஜா மற்றும் எஸ்.சிறிதர்சன் ஆகிய வீரர்கள் குத்துச் சண்டையின் போது காயமடைந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தை பிரதிபலித்து வவுனியாவிலிருந்து ஏழு வீரர்கள் தேசிய கிக் பொக்சிங் குத்துச்சண்டை அணிக்குள் உள்வாங்கப்பட்டு பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் பங்குபற்றியிருந்த நிலையில் போட்டியின் போது குறிப்பிட்ட இரண்டு வீரர்களும் கை மற்றும் முகத்தில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இருந்தபோதும் காயமடைந்த நிலையிலும் தொடர்ந்து விளையாடி இலங்கைக்கு வெள்ளிப்பதக்கத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர். (க-299)

## வென்றது குருநகர் பாடும்மீன் அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக் "A" பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வருகின்ற" லீக் சுற்று கிண்ணம் - 2020" உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் பாடும் மீன் அணி வெற்றி பெற்றது. பாடும்மீன் அணி சார்பாக கெயின்ஸ், தினேஸ் குமார் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (க-106)

## விக்னேஸ்வரா வெற்றிக் கிண்ணம்; இறுதிப் போட்டியும் பரிசளிப்பும்

குப்பிழான்விக்னேஸ்வராவிளையாட்டுக்கழகம் குப்பிழானிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் குப்பிழான் விக்னேஸ்வரா வெற்றிக் கிண்ணம்-2020 மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 2 ஆம் திகதி பிற்பகல் 3 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் வடமராட்சி லீக் அணியான வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் குப்பிழான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இதேவேளை, இதுவரை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்த்து ரசித்த ரசிகர்கள் குறித்த இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு பரிசில்களை வெல்லுமாறு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியினர் கேட்டுள்ளனர். (க-18)







**முல்லைத்தீவு - ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் ந.துரைராசாவின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லை.வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆர்.கணேசலிங்கம், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி.சிந்தாமணி ஆனந்தராசா, விசேட கல்விக்கான ஆசிரிய ஆலோசகர் திருமதி.ந.தேவநேசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)**

## மது போதையில் அரச பஸ் சாரதி...

யிடும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு பயணிக்கும் பேருந்துகளை சோதனையிடும் நடவடிக்கையை 512ஆவது படைத் தளத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் நாவற்குழியில் நேற்றிரவு முன்னெடுத்திருந்தனர். யாழ்ப்பாணம் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினரும் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 7.45 மணிக்கு அக்கரைப்பற்றுக்கு புறப்படும் பேருந்து நாவற்குழி சோதனைச் சாவடியில் மறிக்கப்பட்டு சோதனையிட முற்பட்ட போது, சாரதி மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டது. சாரதியை பேருந்திலிருந்து இறக்கிவிட்ட இராணுவத்தினர், பேருந்தை சோதனையிட்ட போது, 2 பியர் ரின்களும் சாராயப் போத்தல் ஒன்றும் சாரதியின் இருக்கைக்கு கீழ் இருந்து மீட்கப்பட்டன.

சாரதி கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன், அவர் தொர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் வகையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டது.

46 பயணிகளும் அக்கரைப்பற்றுக்கு பயணிப்பதற்கு கோண்டாவில் சாலையைச் சேர்ந்த மற்றொரு பேருந்தை அனுப்பிவைக்க மாறு பொலிஸார் அறிவித்தனர்.

மக்களின் பாதுகாப்பு கருதியே இந்த பேருந்தை தடுத்து வைத்து விட்டு மற்றொரு பேருந்தை வரவழைத்துள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,114)

## கிளிநொச்சி...

கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தலைமையில் விசேட அமர்வு ஆரம்பமாகியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் சுயேட்சைக் குழு உறுப்பினர் களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

அதனை அடுத்து சபை 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு பின்னர் மீண்டும் சபை அமர்வுகள் ஆரம்பமாகிய போதும் வாய்த்தர்க்கம் தொடர்ந்துள்ளது.

வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பில் முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,315)

## ரணில் - சஜித்...

இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒன்றறை மணித்தியாலயம் இந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் வட்டார தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எதிர்வரும் நாட்களில் உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணி மற்றும் பொதுத் தேர்தல் குறித்து இதன் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (ம-3)

## 53 ஆயிரம் பட்...

உள்ள வெற்றிடங்களுக்கேற்ப பட்டத்திற்கு பொருத்தமான தொழில் ஒன்றை பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும். உறுதியளிக்கப்பட்டுள்ளவாறு சுமார் 53 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நடவடிக்கை மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## முகக் கவசத்து...

அதன்படி ஒருமுறை பயன்படுத்தக் கூடிய மாஸ்க்கின் விலை 15 ரூபாய் எனவும் N95 என்ற தரத்திலான மீளவும் பயன்படுத்தக் கூடிய மாஸ்க் 150 ரூபாய் எனவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டு விலையிலும் அதிக விலைக்கு விற்பனை செய்வோரை முற்றுகை இடுவதற்கு நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எந்தவொரு மருந்தகம் அல்லது விற்பனை நிலையங்களில் இவ்வாறு கூடுதலான விலைக்கு இவை விற்பனை செய்யப்படுமாயின் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள அதிகார சபை தீர்மானித்துள்ளது. (ம-3)

## பேருந்து - மோ...

.யாழில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த பேருந்து ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞருடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த விளக்குவைத்த குளம் பகுதியை சேர்ந்த பானுஜன் (19 வயது) என்ற மாணவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். இவர் ஓமந்தை மத்திய கல்லூரியில் உயர்தரம் கல்வி கற்று வருகிறார்.

சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3.250.299)

## முதல்வருடன் கலந்துரை...

மாகாணத்தின் வல்லுநர் ஒருவரை அனுப்புவதற்கு கனடிய உயர்ஸ்தானிகர் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கான நிதிப் பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

மாநகரத்தில் இனங்களுக்கிடையில் எவ்வாறான சமத்துவம் நிலவுகிறது என்பது தொடர்பிலும், தம்முடன் கனடிய நாட்டின் உயர்ஸ்தானிகர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர் கேட்டுக்கொண்டதாகவும் மாநகரசபை முதல்வர் தெரிவித்தார்.

இதேவேளை கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் டேவிட் மைகனன், நிறைவேற்று பணிப்பாளர் டேவிட் ஹார்ட்மன் ஆகியோர் யாழ்ப்பாண மாநகர முதல்வரை சந்தித்துள்ளனர். (ம-3)

## சிங்கள மக்களோடு கைகோரு...

யாழ் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்றைய தினம் இடம்பெற்ற இரண்டாம் மொழிச் சிங்கள கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகில் ஒரு நாளைக்கு எத்தனையோ இலட்சம் உயிர்கள் கொல்லப்படுகின்றன வஞ்சிக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் தமிழ், சிங்கள, இந்து, பௌத்தம் என்ற வேறுபாடுகளை மக்கள் மத்தியில் விதைப்பதை விடுத்து நாம் எல்லோரும் இலங்கையர் என்ற ரீதியில் ஓரணியில் நிற்க வேண்டும்.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் பேசும் போது வடக்குத் தமிழர் பிரச்சினையைப் பற்றியே அதிகம் பேசுகின்றனர்.

2005ஆம் ஆண்டு சுனாமிப் பேரலை எம்மைத் தாக்கியது அதன் பின்னரும் தமிழர், சிங்களவர் என்ற தொடர் சுனாமிப் பேச்சுக்களால் தாக்கப்பட்டு வருகிறோம்.

நாட்டின் நன்மை கருதி நிலைபேறான அபிவிருத்தியை அடையும் பொருட்டு இரு இனங்களுக்கிடையில் முன்மாதிரியான புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து படித்த இளைஞர் யுவதிகள் 200 பேரை கொழும்புக்கு அழைத்து அவர்களுக்கான ஏற்ற தொழில் வாய்ப்புக்களை வழங்கத்திட்டமிட்டுள்ளோம்.

ஆகையால் விக்னேஸ்வரன் போன்ற தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் எம்மோடு பேசவாருங்கள் என அன்போடு அழைக்கின்றேன் என அத்துரலிய ரத்தின தேரர் வேண்டுகோள்விடுத்தார். (ம-3.10)

## பெரும்பான்மை மேலாதிக்க அரசு...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாரம் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் பகுதியில் இந்த வாரம் சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளமை குறித்து வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்து விக்னேஸ்வரன் அனுப்பி வைத்துள்ள மின்நஞ்சலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு தனித்துவமான கலாசாரம், மொழி மற்றும் நிலம் ஆகியன இருந்த போதும் அதனை ஏற்க பெரும்பான்மை மேலாதிக்க அரசதயார் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பாவிடின் அதனை எண்ணி தமிழ் மக்கள் கவலைபட போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டிள்ளார்.

மாறாக சிறுபான்மையினரின் மொழிகளான ஆங்கிலம் மற்றும் வேடுவ மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுமானால் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என தெரிவித்துள்ள அவர் ஆனால் அது எந்தளவு சாத்தியமானது என்பது சந்தேகத்திற்குரியது எனவும் கூறியுள்ளார். (ம-3)

## கோட்டாவுக்...

பேருந்து நிலையம் முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள குறித்த போராட்டத்தில் கட்சி பேதமில்லாமல் தமிழராய் அனைவரையும் அணிதிரளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-3.09.18)

## தவறான செய்திகள் மக்களுக்கு...

அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது. வைரஸ் தொற்றுக்கு உள்ளான நபர் அல்லது இடம் ஒன்று இனங்காணப்பட்டால் அது தொடர்பாக அரச சுகாதார அதிகாரிகளால் ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சிலரது ஒளிப்படங்களை பதிவிட்டு அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில்சிலர் பொய்யான தகவல்களை பரப்பி வருவதாகவும் அவ்வாறு வேறு எந்த வைத்தியசாலைகளிலும் நோயாளர்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பொய்யான தகவல்களை நம்ப வேண்டாம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


சனிக்கிழமை அதிர்ஷ்டம் — சீட்டிழுப்பு இல.: 3294 திகதி: 2020.01.29 — வெற்றி இலக்கங்கள்: 19 36 37 64 — O — 2104 — அடுத்த ஜக்பொட்: 30,739,890/-

அத கோடிபதி — சீட்டிழுப்பு இல: 867 — வர்ணம்: இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி: 2020.01.29 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,377,095/- — வெற்றி இலக்கங்கள்: 26 27 48 50 — C

ராசி அதிர்ஷ்டம் — திகதி 29.01.2020 — வெற்றி வாரம் 2753 — வர்ணம் பச்சை — வெற்றி இலக்கங்கள்: கன்னி 05 08 35 46 — வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,291,870

சங்வர்தன வாசனாவ — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு வாரம் 318 — சீட்டிழுப்பு திகதி 29.01.2020 — நீலம் — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 36 64 65 — விதி எண் 9 — எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.50,845,536 — 2020/01/31 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். — அபிவிருத்தி லொத்தர் சபை — www.dlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 29-01-2020 — சீட்டிழுப்பு இலக்கம் 2376 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 03 20 27 62

தன நிதானய — திகதி - 2020.01.29 — சீட்டிழுப்பு இலக்கம் - 258 — B 17 35 46 71

மெகா பவர் — திகதி 29/01/2020 — சீட்டிழுப்பு இலக்கம் 491 — T 01 03 11 14 68

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு திகதி 29/01/2020 — சீட்டிழுப்பு இலக்கம் 1013 — N 2 7 0 9 1 3 — தேசிய லொத்தர் சபை

## வேலையாட்கள் தேவை

யாழ்.திருநெல்வேலியிலுள்ள
எமது நிறுவனத்துக்கு
1. சமையல் வேலை செய்யக்கூடிய ஆண்/பெண்
2. மேசன் வேலை உதவியாளர்/தொழிலாளி

தொடர்பு (2154)
**077 953 0496**

## வீடு வாடகைக்கு (Annex) (உடனடியாக)

திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் 2 படுக்கையறை, புதிதாக அமைக்கப்பட்ட சமையலறை மற்றும் குளிப்பறை (மேலதிக குளிப்பறை வீட்டுக்கு வெளியே) கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (2145)
**077 820 3754**

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



UK-550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**0768226240** V2 TRAVELS


# வவுனியாவில் ரயில் மோதி பசு பலி

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மதியம் கொழும்பிலிருந்து யாழ் நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி பசுமாடு ஒன்று உயிரிழந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி பயணித்த புகையிரதம் வவுனியா புகையிரத நிலையத்தில் நிறுத்துவதற்கு முற்பட்டபோது குறுக்காக பாய்ந்த பசுமாடு ஒன்றுடன் புகையிரதம் திடீரென்று மோதியதில் பசு மாடு சம்பவ இடத்திலேயே தலைவேறாக துண்டாடப்பட்டு உயிரிழந்துள்ளது.

இதையடுத்து புகையிரதம் நிறுத்தப்பட்டு உயிரிழந்த பசுமாடு புகையிரதக்கடவையிலிருந்து அகற்றப்பட்டு சற்று நேரத்தின் பின்னர் யாழ் நோக்கி தனது பயணத்தை புகையிரதம் மேற்கொண்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3.299)

# நெல் கொள்வனவு

வவுனியாமாவட்ட அரசாங்க அதிபரினால் வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நெல் களஞ்சியசாலைகளிலிருந்து நெல்கொள்வனவு நிகழ்வு நாளை காலை 10.30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி, வேப்பங்குளம், மாமடு ஆகிய நெல் களஞ்சிய சாலைகளிலிருந்து 200 மில்லியன் ரூபாய் நிதியில் ஒரு கிலோ நெல் 50 ரூபாயிற்கு கொள்வனவு செய்யும் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு மாவட்ட அரசாங்க எம்.எஸ்.சமன் பந்துலசேன தலைமையில் பூங்கா வீதியிலுள்ள களஞ்சிய சாலையில் இடம்பெறவுள்ளதாகமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3.299)


## சிவப்பு மணல் விற்பனைக்குண்டு

பள்ள நிலங்கள் சீர் செய்வதற்கும் கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் ஏற்ற மிகச்சிறந்த சிவப்பு நிற மணல் மண் எம்மிடம் விற்பனைக்குண்டு. பளைப்பகுதி தொடக்கம் ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் யாழ்.மாவட்டம் எப்பகுதியிலும் டிப்பர் மூலம் தங்கள் பகுதிக்கு நேரடியாக கொண்டு வந்து எம்மால் இறக்க முடியும்.

தொடர்பு:- (C-9099)
**0776491027, 0779400963**

## விற்பனைக்கு

Cupboard, Show Case, Racks, Rack Bars
விற்பனைக்கு உண்டு.
காட்சியறைகளுக்கு உகந்தது. (2149)

**077 163 3505**

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

**076 443 1576**



## அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9015)

FWC

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2020 பிரேரணைகள்

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் மூன்றாவது வார இறுதியில் நடைபெறவுள்ளது.

இதற்கமைவாகப் பிரேரணைகளை அங்கத்தவர்கள் 17.02.2020ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பிரேரணைகள் அனுப்ப வேண்டிய முகவரி:
செயலாளர், 133, செம்மணி வீதி, நல்லூர்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய அலுவலகம்,
133, செம்மணி வீதி, நல்லூர். (2155)

இ.குகானந்தன்
(செயலாளர்)


# மரண அறிவித்தல்



தோற்றம் 30 - 10 - 1957

மறைவு 27 - 01 - 2020

## திருமதி பராசக்தி அரியதாசன்

அம்பனையைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் தமிழ் (விசாலாட்சி) பாடசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி அரியதாசன் 27.01.2020 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அரியதாசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தவமணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பூபதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சங்கீதா, யனார்த்தனன், தேஷ்பிரியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பாலரஞ்சனா மற்றும் பத்மநாதன், புஸ்பநாதன், ஜெகதீஸ்வரன், பரமேஸ்வரன், பத்மினி, தயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் செல்வராணி, தர்சினி, மஞ்சுளா, யசோதா, ரமணன், ஸ்ரீகரன், மரியதாஸ் ஈஸ்வரி (தேவி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தமிழ் பாடசாலை ஒழுங்கை,
(விசாலாட்சி வித்தியாலயம்), மல்லாகம். (2147)

தகவல்:- குடும்பத்தினர்
0776998683/0778640704



தோற்றம் 04 - 06 - 1946

மறைவு 29 - 01 - 2020

## திருமதி கமலேஸ்வரி ஆறுமுகம்

(தாவடி)

முருகமூர்த்தி கோவிலடி, தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி ஆறுமுகம் நேற்று (29.01.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்தமகளும் காலஞ்சென்ற சரவணமுத்து - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புச் சகோதரியும் குமாரசுவாமி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதீபன் (யாழ் மாநகர சபை), பிருந்தாபன் (ஆசிரியர் - யாழ்/இந்துக் கல்லூரி), பிரகலாதன் (பிரான்ஸ்), பிரவீந்தன் (லண்டன்), பிரசாந்தன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கேமளா, ஜனனி, தர்மினி, சுபாஜினி, அனுஷியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றபீசன், றாகீசன், றணுயன், யருசன், ஆரோன், அக்சயன், றாகவி, ஆருஸ், ஈஸ்வரி, ஈழவன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.22, முருகமூர்த்தி கோவிலடி,
பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில். (2156)

தகவல்:-
குடும்பத்தினர்
0212213760, 0772550807

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.